பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 11 வியாழக்கிழமை 23.02.2023 கதிர் 107

இனி இது ரகசியம் அல்ல!

தேர்தல் ஒத்திவைப்பு, மின் சாரக் கட்டண உயர்வு, தனிநபர் வருமான வரி அதிகரிப்பு, அரசமைப்பின் 13ஆவது திருத் தம் போன்ற இன்னோரன்ன பல பிரச்சினைகளால் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 2

# 300 முஸ்லிம் குடும்பங்களுக்கு பச்சிலைப்பள்ளியில் காணிகள்

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழு வசமுள்ள நிலத்தை வழங்க வடக்கு ஆளுநர் அறிவுறுத்து

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாணத்தில் சொந்தக் காணிகள் அற்றிருக் கும் 300 முஸ்லிம் குடும்பங்களுக்கு பச்சிலைப் பள்ளியில் காணிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் வசம் உள்ள சுமார் 45 ஏக்கர் காணியில் ஒரு பகுதியை முஸ்லிம்களுக்குப் பிரித்து வழங்குவதற்கான 2

# புதிய வரியை நீக்க ஒரு வாரக் கெடு இல்லையேல் முழு வேலை நிறுத்தம்

## புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து 40 தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி அறிமுகப் படுத்தியுள்ள புதிய தனிநபர் வரிச் சட்டத்தை ஆட்சியாளர்கள் மீளப்பெற நாட்டிலுள்ள 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஒரு வார காலக்கெடு விதித்துள்ளன.

புதன்கிழமை கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்பா கக் கூடிப் போராட்டத்தில் ஈடுபட்ட இந்தத் தொழிற்சங்கத் தைச் சேர்ந்தவர்கள், ஒருவாரத்திற்குள் புதிய வரி திரும்பப் பெறப்படவில்லை என்றால் முழு வேலை நிறுத்தப் போராட்டத் தில் ஈடுபடப்போவதாகவும் எச்சரிக்கைவிடுத்துள்ளன. அது வரையான ஒரு வார காலத்தை அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக் கும் வகையில் கறுப்புக் கொடி வாரமாகவும் அறிவித்துள் ளன. 8

# மொட்டுக்கு ரணில் வழங்கிய மூன்று வாக்குறுதிகள் எவை?

## அம்பலப்படுத்துகின்றார் சஜித்




தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மொட்டுக்கு வழங்கிய மூன்று வாக்குறுதிகள் தொடர் பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அம்பலப் படுத்தியுள்ளார். 2



# மன்னார், பூநகரியில் அதானி காற்றாலை அமைக்க அனுமதி

## இலங்கை முதலீட்டுச் சபை வழங்கியது

மன்னார் மற்றும் பூநகரியில் இரு காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு இந்தியாவின் சர்ச்சைக்குரிய அதானி குழுமத்தி ற்கு இலங்கை முதலீட்டுச் சபை அனுமதி வழங்கியுள்ளது. அது தொடர்பான உத்தரவு வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. 8

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுவிட்டது

## வர்த்தமானி அறிவிப்பு மட்டுமே வரவேண்டும் என்கிறார் தேசப்பிரிய

மார்ச் 9ஆம் திகதி நடைபெறும் என்று அறி விக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது. அது குறித்த உத்தியோக பூர்வமாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க வேண்டியது மட்டுமே எஞ்சியிருக்கின்றது என்று தெரிவித்தார் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய. 8

## இலங்கை கடல் எல்லைக்குள்

# இந்திய மீனவரை அனுமதித்தால் மக்களைத் திரட்டிப் போராட்டம்

## கஜேந்திரன் நாடாளுமன்றில் எச்சரிக்கை



இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கான தீர்வாக அவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட் டால் அதற்கு எதிராக மக்கள் போராட் டங்களை நடத்துவோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளு மன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார். 8

# ஜப்பான் உதவி

நாடு முழுவதும் உள்ள அரச மருத்துவ மனைகளுக்கு டீசல் வழங்குவதற்காக ஜப்பானிய அரசு 46 மில்லியன் டொலர்களை மனிதாபி மான நன்கொடையாக வழங்கியுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம், கைச்சாத்திடும் நிகழ்வு புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் முன்னிலை யில் இடம்பெற்றது. 8


# தேர்தலை நடத்த வலியுறுத்தி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

அறிவிக்கப்பட்டபடி மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்பாக புதன்கிழமை ஆர்ப்பாட் டம் இடம்பெற்றது.

தேர்தலை நடத்த வலியுறுத் தும் பதாகைகளுடன் காணப்பட்ட போராட்டக்காரர்கள், தமது கோரிக் கையை வலியுறுத்தி அங்கு முழக் கமிட்டனர்.

தேர்தல் ஆணைக்குழுவிற்குச் செல்லும் பாதை இந்தப் போராட் டத்தால் மூடப்பட்டது. பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டு தேர்தல் கள் ஆணைக்குழு அலுவலகத் திற்குப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டி ருந்தது.

# விமலின் சந்தேகம்



இலங்கையின் தேசிய புலனாய்வு தகவல்கள் (ஊஜ்ஜ) சேவைப் பிரிவை அமெரிக்காவின் மத் திய புலனாய்வு பிரி வின் (சிஐஏ) கீழ் கொண்டு வரும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என 8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆட்சியின் மீதான அதிருப்தி, வெறுப்பு அதிகரித்து வருகின்றது. இதன் வெளிப்பாடாகத் தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆங்காங்கே, அடிக்கடி போராட்டங்களை நடத்தி வருகின்றன. ஆனால் இவையெல்லாம் தனித் தனி முயற்சிகளாக இடம்பெறுகின்றன. இதனால் இவற்றின் தாக்கம் "அரகலய" போன்றதாக இல்லை.

"அரகலய" மக்கள் எழுச்சியைப் போன்றதொன்று இல்லாமல் இந்த ஆட்சியை அசைப்பதும் சாத்தியமில்லைஎன்பதால்எதிர்கட்சிகள்அனைத்தும் ஒன்றிணைவதன் அவசியம் அனைத்துத் தரப்பினராலும் உணரப்பட்டுள்ளது. ஆனால் கடந்தமுறை "அரகலய"போராட்டத்தின்வெற்றிக்கான பெயர்முன்னிலைசோசலிசக்கட்சிக்குச் சென்றுவிட்டமைபோன்று இந்தத் தடவை நடக்கக்கூடாது என்பதிலும் பெரிய கட்சிகள் தெளிவாக இருக்கின்றன.

இந்தப் பின்னணியில்தான் எதிர்க் கட்சிகள் அனைத்தின் பிரதிநிதிகளையும் ஒரு கலந்துரையாடலுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அழைத்திருந்தார். செவ்வாய்க்கிழமை நடந்த இந்தச் சந்திப்பிற்கு வந்திருந்த கட்சிகள்மத்தியில்அனைவரும்சேர்ந்து செயற்படவேண்டும் என்கிற கருத்து, எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதைப்போன்று அதை எப்படிச் செய்வது என்பதில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர முடியவில்லை. அதற்குக் கட்சிகளுக்கு இடையில் நிலவும் சந்தேகங்களும் ஒரு காரணம்.

குறிப்பாக கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் சிங்கள் கட்சிகளின் அணுகுமுறை மீது முழு நம்பிக்கை வைத்து இந்தத் தடவை காரியத்தில் இறங்கப் பெரிதும் பின்னடிக்கின்ற நிலையே இருந்தது. "அரகலய"வின்போதும் இதுபோன்ற ஒருங்கிணைப்புக் கூட்டங்களை சுமந்திரன் ஏற்பாடு செய்திருந்தார். ரணில்கூட ஒரு கட்டம் வரை அந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டிருந்தார். அதில் தமிழர்களின் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வுதான் தீர்வு அதை ஆதரிப்பது உள்ளிட்ட பல விடயங்கள் அழுத்தமாகப் பேசப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டும் இருந்தன.

அப்படி உடன்பாடு காணப்பட்ட பல விடயங்களில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ போன்றவர்கள் இப்போது பின்வாங்கியுள்ளனர் என்று தமிழர் தரப்புக்கள் கருதுகின்றன. குறிப்பாக அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு, அரசமைப்பின 13ஆவது திருத்தத்தில் காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்துப் பேசலாம் போன்ற சஜித் தரப்பின் நிலைப்பாடுகளால்தமிழர்தரப்பு இந்தத்தடவை முழுமனதோடுஎதிரணிகளுடன்இணையத் தயாராக இல்லை.

அதிகாரப்பகிர்வு, 13ஆவதுதிருத்தம் என்பன தொடர்பில் சஜித் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் கிரியெல்லதெரிவித்த கருத்துக்கள் எல்லாம் இந்தப் பின்னடிப்புக்குக் காரணம் என்று தெரிகின்றது.

சஜித்பிரேமதாசஇன்றுயாழ்ப்பாணம் வருகின்றார். இந்த விடயங்கள் தொடர்பில் அவர் இங்கு என்ன சொல்லப் போகிறார் என்று தமிழ்த் தரப்புக்கள் காத்திருக்கின்றபோலத் தெரிகிறது. அவர் இங்கு தெரிவிக்கும் கருத்துக்களைப் பொறுத்தே தமிழர் தரப்பின் அடுத்த நகர்வுகளும் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அதிகாரப் பகிர்வு தொடர்பில் இப்போதைக்குப் பேச வேண்டாம், 13ஆவது திருத்தத்தின்படி காணி, பொலிஸ் அதிகாரங்களை முழுமையாக வழங்குவது குறித்துப் பின்னர் ஆராயலாம் போன்ற நிலைப்பாடுகள் அவர் இங்கு வெளிப்படுத்தினால் அல்லது அவை குறித்து எதுவுமே பேசாமல் விட்டால் ஐக்கிய மகைள் சக்தியையும் கூட தூக்கி எறிந்து அரசியலில் அடுத்த நகர்வுக்குச் செல்லும் தயார்ப்படுத்தலோடுதான் இந்த விடயங்களில் தமிழர் தரப்பு காத்திருக்கிறது என்று தெரிகின்றது.

******

தெற்கில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புக்கள் மக்கள் மத்தியில் ஜேவிபியின் ஆதரவுத் தளம் பெருகி வருவதைக் கோடிகாட்டியிருக்கின்றது. மக்கள் சக்தியின் ஆதரவுத் தளமும் பெருகி வருகின்றபோதும் ஜேவிபியின் ஆதரவுப் பெருக்கம் இந்தக் கட்டத்தில் முக்கியமானதாகப் பார்க்கப்படுகின்றது.

அண்மையில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பின்படி 32 வீதமானவர்கள் ஜே.வி.பிக்கும் 31 வீதமானவர்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு கட்சிகளும் ஐக்கிய தேசிய கட்சி ஸ்ரீலங்கா, பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றைவிட தெளிவாக முன்னணியில் காணப்படுகின்றன.

ஐஎச்பி ஸ்லொட்ஸ் என்ற அமைப்பு நடத்திய இந்தக் கருத்துக்கணிப்பு, மக்கள் பாரம்பரியக் கட்சிகள் மீதான நம்பிக்கையை இழந்து புதிய கட்சிகளுக்கு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கும் மன நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதை உணர்த்துகின்றது.

அதனாலேயே இப்போதெல்லாம் ஐக்கிய மக்கள் சக்தி ரணிலையும் ராஜபக்ஷக்களையும் தாக்குவதைவிட ஜேவிபியை தனது பரப்புரை மேடைகளில் அதிகம் தாக்கத் தொடங்கியிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு மூன்று வீதத்தால் அதிகரித்துள்ளதையும் ஜேவிபிக்கான ஆதரவு ஒரு வீதத்தால் அதிகரித்துள்ளதையும்ஐக்கியதேசியகட்சிக்கான ஆதரவு ஐந்து வீதத்தால் அதிகரித்துள்ளதையும் இந்தக் கருத்துக்கணிப்பு புலப்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவிற்கான ஆதரவு 11 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

மக்களின் இந்த மன உணர்வு உள்ளூராட்சி தேர்தலில் வெளிப்பட்டால் ஜேவிபியும் ஐக்கிய மக்கள் சக்தியும் அநேக இடங்களைக் கைப்பற்றும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தலை நடத்துவதுக்கு ரணில் பின்னடிப்பதற்கான உண்மைக் காரணம் இது தான்.

- இடிமின்னல் -

## 300 முஸ்லிம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பூர்வாங்க ஏற்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளன.

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பின்னர் மீளக்குடியமர்ந்த முஸ்லிம்களில் 300 குடும்பங்களுக்குச் சொந்தக் காணிகள் இல்லை. இதனால் இவர்களுக்கு அரச வீட்டு வசதி உள்ளிட்ட உதவிகளையும் வழங்க முடியாதுள்ளது.

இதையடுத்து பச்சிளைப்பள்ளியில் காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவின் ஆளுகையில் உள்ள நிலத்தில் இருந்து இந்தக் குடும்பங்களுக்கு காணிகளை வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, குடும்பம் ஒன்றுக்கு 2 பரப்புக் காணி வீதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவிற்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதறகமைய இந்த 300 குடும்பங்களிற்கும் தலா 2 பரப்புக் காணி வீதம் வழங்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. காணிகளைப் பிரித்து வழங்குவதற்கான வரைபடம் தயாரிக்கும் பணிகள் காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவின் தலைமைப் பணிமனையால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# சுமந்திரனும் சம்பந்தனும் சேர்ந்து தமிழ்த் தேசியத்தை அழிக்கின்றனர்

## தமிழ் அரசுக் கட்சி பிரமுகர் தவராசா குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியத்தை சம்பந்தனும் சுமந்திரனும் சேர்ந்து அழிக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் கட்சியிலிருந்தே விரட்டப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் சட்டத்தரணி கே.வி.தவராசா. தமிழரசுக் கட்சி சுமந்திரனின் சொந்த நிறுவனம் அல்லது வீடு போலவே இருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் செவ்வாய்க் கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு தெரிந்தவரையில் தமிழரசுக் கட்சியின் தலைமையகம் யாழ்ப்பாணம் மார்டின் வீதியிலேதான் உள்ளது. அந்தத் தலைமைச் செயலகத்தில்தான் கட்சியின் பல முடிவுகள் எடுப்படுவது வழமை. தேர்தல்பணிகளும்அங்குதான் நடக்கும். ஆனால் இம்முறை தேர்தலுக்கான பணிகள் மூன்றாம் குறுக்கு தெருவிலுள்ள சுமந்திரன் வசிக்கும் வீடொன்றில் நடந்ததாகத்தான் நானும் கேள்விப் பட்டிருக்கிறேன்.

இந்தச் செயற்பாட்டிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கட்சியின் தலைவரிடம் சில உறுப்பினர்கள் வலியுறுத்தி இருக்கின்றனர். எனக்கு தனிப்பட்ட விரோதம் யார் மீதும் இல்லை. கட்சிக் கொள்கை ரீதியான விடயங்களையே கூறுகிறேன். தமிழரசுக் கட்சியின் தமிழ்த் தேசியம் என்ற கொள்கை அடிப்படையிலையே எனது செயற்பாடுகள் அமைகின்றன.

2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழரசுக் கட்சியின் தமிழ்த் தேசியம் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைவடைந்து தற்போது இறுதிக் கட்டத்தில் நிற்கிறது.

இதற்கு முக்கிய காரணம் சம்பந்தனும் சுமந்திரனும்தான் என்பதை நான் வெளிப்படையாகக் கூறிவைக்கின்றேன். அவர்கள் தொடர்ந்தும் இவ்வாறே செயற்பட்டால் தமிழ்த் தேசியமே அழிக்கப்படும்.

தமிழ்த் தேசியத்தை அளிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கட்சியால் விரட்டப்பட வேண்டியவர்கள். கட்சியினால் மட்டுமல்ல மக்களினால் முற்று முழுதாக ஒதுக்கப்படவேண்டியவர்கள். தமிழ்த் தேசியம் அழிந்து போக நாங்கள் இடங்கொடுக்க முடியாது.

முல்லைத்தீவு கரைத்துரைப்பற்று பிரதேச சபையின் தமிழரசு வேட்புமனு நிராகரிக்கப்பட்ட நிலையில் முஸ்லீம் காங்கிரசின் ஐக்கிய தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் அங்கே போட்டியிடுவதாகவும் அதற்காக ஒப்பந்தம் நடைபெற்றிருப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன்.

யார் யாரோடு ஒப்பந்தம் செய்வதென்று இல்லையா. தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினராக பல ஆண்டுகள் இருக்கிறேன். இந்த ஒப்பந்தம் சம்மந்தமாக அரசியல் குழுவில் பேசப்படவில்லை. அந்தக் குழுவில் இருக்கிற ஒருவருக்கும் தெரியாது.

ஆக தமிழரசுக் கட்சி தற்போது சுமந்திரனின் சொந்தக் கம்பனி அல்லது சொந்த வீடு போலதான் இருக்கிறது. அப்படித்தான் எல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. அவரது இந்தப் பேச்சுக்கள் ஒப்பந்தங்கள் குறித்து யாருக்காவது தெரியுமா என்றால் தலைமைத்துவத்திற்கே தெரியாத நிலைமைதான் உள்ளது. இவர்கள் அம்பாறை திருகோணமலை என்று முல்லைத்தீவையும் அழித்து எங்களிடமிருந்து இழக்கும் நிலையை ஏற்படுத்தப் போகிறார்கள் – என்றார்.

## மொட்டுக்கு ரணில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நொச்சியாகம பிரதேசத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை அம்பலப்படுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

தமக்கு விசுவாசமாக வாக்களிக்கும் மொட்டுவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு, அவர்களின் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு, நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடியும் வரை நாடாளுமன்றத்தை கலைக்காமல் இருத்தல் ஆகிய 3 கொள்கை ரீதியான வாக்குறுதிகளின் பிரகாரமே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்துள்ளார்.

மக்கள் ஆணை இன்றி மொட்டுவின் கைப்பாவையாக நியமிக்கப்பட்டுள்ள தற்போதைய ஜனாதிபதி, வாக்குறுதிகளை மக்களுக்காக முன்வைக்காமல்

(08 ஆம் பக்கம் பார்க்க)



காலைக்கதிர்
Kalaikkathir

# இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிக்கு தீர்வுகாண விசேட நடவடிக்கைகள் தேவை!

## நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்து

வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் வடக்கு மீனவர்கள் வாழ்வாதார மட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தப் பிரச்சினைக்கு கடற்றொழில் அமைச்சரால் நிரந்தர தீர்வைக் காண முடியாது என்பது எமது நிலைப்பாடாகும். ஆகவே காலம் காலமாகத் தொடரும் பிரச்சினைக்கு தீர்வு காண வெளிவிவகாரத்துறை அமைச்சு விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் வெளிவிவகாரத்துறை அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் இரு கட்டளைச்சட்ட மூலத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கத்தால் கடந்த காலங்களில் நெல் கொள்வனவு செய்யப்பட்டது. நிதி இல்லை ஆகவே நெல்லை கொள்வனவு செய்ய முடியாது என தற்போது குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வவுனியாவுக்கு வந்த போது நெல்லுக்கான உத்தரவாத விலையை 100 ரூபாவாக நிர்ணயிப்பதாக குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் சம்பா நெல்லை தற்போது கொள்வனவு செய்வதில்லை. இதனால் தனியார் வியாபாரிகள் 5 ஆயிரத்து 500 ரூபா முதல் ஆறாயிரம் ரூபாவுக்கு மாத்திரமே கொள்வனவு செய்கின்றனர்.

இதனால் ஒரு மூடைக்கு மூவாயிரம் ரூபா வரை நட்டம் விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. எனவே சம்பா நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான வேலைத் திட்டத்தை ஜனாதிபதி எடுக்கவேண்டும்.

கடற்றொழில் தொடர்பில் குறிப்பிட்ட சில நாள்களாகக் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு பகுதி மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இருந்த கடற்றொழில் அமைச்சர்கள் இதனைக் கட்டுப்படுத்தியிருந்தார்கள். தற்போது கடற்றொழில் அமைச்சர் என்ன செய்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக வரும் போது எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதற்கான நிரந்தரத் தீர்வை கடற்றொழில் அமைச்



சரால் தர முடியாது என்பது என்னுடைய நிலைப்பாடு.

இது நாடு சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் இது தொடர்பில் அமைச்சர் ஆக்கபூர்வமான கலந்துரையாடலை முன்வைக்க வேண்டும். மீனவ சமூகங்கள் இது தொடர்பில் கேட்கும் போது கடற்றொழில் அமைச்சர் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துச் செல்கின்றார்.

தாயும் பிள்ளையுமாக இருந்தாலும் வாயும் வயிறும் வேறு? நிரந்தர தீர்வை எட்டுவதற்குரிய முயற்சிகளை வெளிநாட்டு அமைச்சு எடுக்க வேண்டும்.– என்றார்.



# 2021இன் பின் வாகனங்களை இறக்குமதி செய்யவில்லை

## குற்றச்சாட்டுகளுக்கு சியம்பலாபிட்டிய விளக்கம்

239 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் உண்மை இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர்களுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன என எதிர்க்கட்சிகள் தேர்தல் பிரசாரங்களில் தெரிவித்து வந்த நிலையில் நிதி இராஜாங்க அமைச்சர் அதற்கு இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

2021ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவொரு வாகனமும் இறக்குமதி செய்யவில்லை என்றும் அது தொடர்பாக எந்தக் கலந்துரையாடலும் இடம்பெறவில்லை என்றும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள், வரி செலுத்தாமையால் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டுகளையும் அவர் மறுத்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசியல் என்பது வாக்கு மட்டுமல்ல அதையும் தாண்டியது

மாசி 21 பன்னாட்டு தாய்மொழி தினம் கடந்துபோனது. ஈழத் தமிழ்ப் பரப்பில் அதற்கான முக்கியத்துவம் பத்திரிகைகளில் சில கட்டுரைகள் வெளியாகியதுடன் முடிந்துபோனது ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் ஒரு மொழியால் உலகில் அறியப்படும் ஓரினம், மொழியை முன்னிறுத்தி தன அரசியல் உரிமைகளுக்காக உயிர்த் தியாகங்களைச் செய்த ஓர் இனம் தாய்மொழி தினம் தொடர்பில் அக்கறையற்று இருக்கிறது. அதன் அரசியல் தலைவர்கள் அந்தத் தினத்திற்கு, குறைந்தபட்சம் புத்தாண்டு, தீபாவளி, கிறிஸ்மஸுக்குக் கொடுக்கும் மதிப்பைக்கூடக் கொடுக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈழத் தமிழர்களுக்கு இந்த நாள் மிக முக்கியமானது. அதன் உருவாக்கமும் ஈழத் தமிழர் அரசியல் உரிமைகளும் ஒரே தளத்தில் பயணிப்பவை. ஆனால் அது பற்றிய விழிப்புணர்வே இன்றிய மாக்களாக நாம் அனைவரும் மாறிப்போயிருக்கின்றோம்.

யுனெஸ்க்கோவால் 1999 கார்த்திகை 17 அன்று பன்னாட்டு தாய்மொழி தினம் முதன் முதலில் அறிவிக்கப்பட்டது. இது முறையாக 2002இல் பன்னாட்டரங்கில் முறையாக ஏற்கப்பட்டது. உலக மக்கள் மொழிகளைப் பேணி வளர்த்தலையும் பாதுகாத்தலையும் வென்றெடுக்கும் விரிவான முன்முயற்சியின் ஒரு பகுதியே இத்தீர்மானம். இதன் முக்கியத்துவத்தைக் 2008 ஆம் ஆண்டை பன்னாட்டு மொழிகளுக்கான ஆண்டாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்புக்கள் எல்லாம் இருந்தாலும் ஏன் மாசி 21 அதற்குரிய நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது?

பிரிட்டிஷாரின் பிடியிலிருந்த இந்தியாவைவிட்டு அவர்கள் வெளியேறிச் செல்லும்போது அதனை இரண்டாகப் பிரித்து பாகிஸ்தான், இந்தியா என்று கொடுத்துவிட்டுப் போனார்கள். பாகிஸ்தான் கிழக்கு மேற்கு என்று நிலத் தொடர்பற்றுப் பிரிந்து கிடந்தது. மேற்கில் இருந்த (தற்போதைய பாகிஸ்தான்) மக்களில் பெரும்பான்மையினர் உருதுவைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தார்கள். கிழக்கில் வங்காள மொழியைப் பேசுபவர்கள் அதிகமாக இருந்தனர். ஆனால் உருதுவே பாகிஸ்தானின் தேசிய மொழி என்று அறிவிக்கப்பட்டது. (தனிச் சிங்களச் சட்டம் மாதிரி).

கிழக்கு பாகிஸ்தான் மக்களால் அதை ஏற்கமுடியவில்லை. கிழக்கு பாக்கித்தான் மக்கள் அவர்களது தாய் மொழியான வங்காள மொழியைக் குறைந்தது தேசிய மொழிகளில் ஒன்றாக அறிவிக்க வேண்டுமென்று கோரினார்கள். இந்தக் கோரிக்கை முதலில் தேரேந்திரநாத் தத்தாவினால் 1948 ஆம் ஆண்டு மாசி 23 அன்று பாக்கிஸ்தான் நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டது.

இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் பொது மக்களின் ஆதரவுடன், மாபெரும் பேரணிகளையும் கூட்டங்களையும் ஏற்பாடு செய்தனர். போராட்டத்தை முடக்குவதற்காக பாக்கிஸ்தான் அரசு பொதுக் கூட்டத்தையும் பேரணிகளையும் தடை செய்தது. 1952 மாசி 21 அன்று நடைபெற்ற பேரணி மீது காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில் 5 மாணவர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தனர்.

வரலாற்றில் தாய்மொழிக்காக உயிர் நீத்த இந்த அரிய நிகழ்வு ஆழமாகப் பதியப்பட்டது. பின்னாளில் பாகிஸ்தானில் இருந்து கிழக்கு பிரிந்து பங்களாதேஷ் ஆனது. அங்கு மாசி 21 மொழித் தியாகிகள் தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அதன் நீட்சி மற்றும் வளர்ச்சியாகவே பன்னாட்டு தாய்மொழி தினமாக மாசி 21 ஏற்கப்பட்டது.

பங்களாதேஷின் மொழிப் போராட்டத்திற்குச் சற்றும் குறையாத போராட்டங்களை ஈழத் தமிழர்கள் நடத்தியிருக்கிறார்கள். ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல தமிழ்நாட்டுத் தமிழர்களும் நடத்தியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மொழி உரிமைப் போராட்டத்தால் உயிரிழப்புகளும்கூட ஏற்பட்டுள்ளன. இங்கு சிங்கள சிறிக்கு எதிரான போராட்டத்தால் அடி உதைபட்டு வதைபட்டவர்கள் அனேகம்.

ஆனாலும் பன்னாட்டு தாய்மொழி தினம் பற்றி எமது இன்றைய அரசியல் தலைவர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை. அதை இன்றை தலைமுறையிடம் எடுத்துச் செல்லவேண்டும் என்கிற விழிப்புணர்வும் இல்லை.

அரசியல் என்பது வெறுமனே வாக்குவேட்டையாடும் தொழில் மட்டுமல்ல, மக்களை அரசியல் மயப்படுத்தவும் வேண்டிய செயல் என்பதை தமிழ்த் தலைவர்கள் என்று உணர்ந்துகொள்ளப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. இங்கே மொழிதான் எல்லாவற்றுக்கும் அடிப்படையானது. அதை வெறுமனே கடந்து சென்றுவிட்டு அரசியலை வளப்படுத்தவும் வழிப்படுத்தவும் முடியாது. கிழக்கு வரை பேரணி செல்லும் பல்கலைக்கழக மாணவர்களும்கூட முதலில் அடிப்படைகளைப் பலப்படுத்துவது அரசியலுக்கு முக்கியம்.



## இடைநிறுத்திய திட்டங்களை மீண்டும் தொடங்க ஜப்பானிடம் கோரிக்கை

நிதி நெருக்கடி காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சகல வேலைத் திட்டங்களையும் மீண்டும் ஆரம்பிக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (ஜெய்க்கா) பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆசியாவிற்கான ஜெய்க்கா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் இதோ தெருயுகியுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே பிரதமர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தால் மறுசீரமைப்பு தொடர்பான வேலைத்திட்டங்களுக்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டவுடனேயே தமது வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக அவர் பிரதமரிடம் உறுதியளித்தார்.

அரச நிதி நெருக்கடிகள் காரணமாக 200, 500 கோடி டொலர் பெறுமதியுடைய ஜெய்க்கா நிறுவனத்தின் 12 வேலைத்திட்டங்கள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விடயங்களில் ஜப்பான் முக்கிய பங்கை வகிக்கின்றது. அந்த வகையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் திருப்தியளிக்கின்றன என ஜெய்க்கா பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பல்வேறு நகரங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட நீர் சுத்தீகரிப்பு, கழிவு நீர் கால்வாய், சுகாதாரம் மற்றும் சுத்தீகரிப்பு வேலைத் திட்டங்கள் உள்ளிட்டவற்றுக்கு பிரதமர் ஜெய்க்கா நிறுவனத்துக்கு நன்றி தெரிவித்தார்.

மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள், ரயில் கடவைகள் உள்ளிட்டவற்றை இலத்திரனியல் மயப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பிரதமர் இதன் போது கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி தேவையான சட்டங்களை இயற்றுவதன் மூலம் திட்டங்களை அமுல்படுத்துவதில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் பிரதமர், ஜெய்க்கா பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தார்.

மேலும், ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் கொள்கைகள் தொடரும் வகையில் வரவு - செலவு திட்ட சட்டம் நிறைவேற்றப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## நாணய நிதியத்தின் பதிலை துரிதப்படுத்த சர்வதேச நாடுகளின் ஆதரவும் வேண்டும்!

### இலங்கை பிரதிநிதிகள் இராஜதந்திரிகளுக்கு எடுத்துரைப்பு

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாக இலங்கை இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்துள்ளது.

பாரிஸ் கிளப் உறுப்பினர் நாடுகளின் தூதரகத் தலைவர்கள் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இலங்கை அதிகாரிகள் இதனை எடுத்துரைத்துள்ளனர்.

இந்த கலந்துரையாடலில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுநர், திறைசேரி செயலாளர், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் நிதி உதவி தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் விரைவான பதிலுக்காக சர்வதேச நாடுகளின் ஆதரவு அவசியம் என்றும் இலங்கை பிரதி நிதிகள் எடுத்துரைத்துள்ளனர்,

## கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வுகளைகாண புதிய ஒப்பந்தம்!

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு காண, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும் என வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.


அத்தோடு அனுமதிப்பத்திர முறைமையை உருவாக்கும் யோசனை இருப்பதாகவும் அது தொடர்பில் பரிசீலித்து வருவதாகவும் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு கூறியுள்ளார்.

கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு காண வெளிவிவகார அமைச்சு தலையிட வேண்டும் என சார்ள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்றில் வலியுறுத்தியிருந்தார்.

# ஒலபொடுவ ரஜமஹா விகாரை வருடாந்த பெரஹரா ஆரம்பம்!







வரலாற்றுச் சிறப்புமிக்க ஹொரணை ஒலபொடுவ ரஜமஹா விகாரையின் வருடாந்த நவம் மஹா பெரஹராவின் ஆரம்ப நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

விகாரைக்கு வருகை தந்த ஜனாதிபதி, தலகல விபஸ்ஸனா தியான நிலையத்தின் தலைவர் ஒல பொடுவ ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வண, உடுவே ஹேமாலோக நாயக்க தேரரைச் சந்தித்து நலம் விசாரித்தார். அதன்பின், விகாரையின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் கேட்டறிந்ததுடன், தேரருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். 2023 நவம் மஹா பெரஹராவை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி விசேட நினைவுக் குறிப்பையும் இட்டார்.

அதனையடுத்து, தாது மண்டபத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மதவழிபாடுகளில் ஈடுபட்டதுடன், மகாசங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதியை ஆசிர்வதித்தனர். நவம் மஹா பெரஹரா நிகழ்வையொட்டி, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆசிவேண்டி முப்பத்தேழு மணிநேர பிரித் உபதேசமும் விகாரையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்த ஸ்ரீசுமங்கலதர்ம பாடசாலையின் பிள்ளைகளுடன் சிநேக பூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, அவர்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஒலபொடுவ ரஜமஹா விகாராதிபதி இத்தாலி மிலானோ நகரத்தின் லங்காராமாதிபதி ஒலபொடுவே தம்மிக தேரர் உட்பட மகா சங்கத்தினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்தன, சஞ்சீவ எதிரிமான்ன உள்ளிட்ட பலர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.




## நாட்டில் நான்கில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிப்பு!

இலங்கையில் நான்கில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் இலங்கையின் பல பல்கலைக்கழகங்கள், கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சுகாதார கொள்கை நிறுவனம் ஆகியவற்றால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் முடிவிலேயே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் 23 வீத மானவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், மூன்றில் ஒருவருக்கு, அதாவது 31வீதமானவர்களுக்கு இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகமாக இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இலங்கையில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ள ஐவரில் இருவர் (38 சதவீதம்) கண்டறியப்படாதவர்கள் என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

## மின்சார சபையினரை தாக்குவதற்கு முயற்சி

அகலவத்தை பிரதேச வீதி ஒன்றின் மின்சார கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில் நுட்ப கோளாறை சரி செய்யச் சென்ற உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் மின்சார ஊழியர்களை கல்லால் தாக்க முற்பட்ட நபர் ஒருவர் செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டார் என்று அகலவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

மின்சார கட்டண அதிகரிப்பால் ஆத்திரமுற்றே அந்த நபர் மின்சார சபையினரைத் தாக்க முற்றபட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மின்சார ஊழியர்கள் அகலவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, அகலவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தரிந்து ஹெட்டியாராச்சி உத்தரவின் பேரில் அகலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir




# தமிழ் மொழி வழி பன்மொழி

உலகத் தாய்மொழி நாள் என்றால் பரந்துபட்ட இவ்வுலகம் முழுவதுமான பன்னாட்டிலும் வாழும் மக்களால் தோற்றுவிக்கிப்பட்ட தத்தம் தாய்மொழியைப் போற்றும் நாள் என்பது பொருள்.

இத்தொடருக்கு உலகத்திற்கே தாய்மொழி ஒன்று என்பதாகப் பொருள் அமையாதென்பதால் உலகெங்கிலும் பலவாகக் கிளைத்துச் செழித்த அத்தனை மொழிகளையும் தோற்றுவித்தோர்க்கு வாழ்வும் வளமும் கொடுத்தது அவரவாதம் மொழியே எனலாம். அதனைத்தான் அவரவரும் தத்தம் தாய்மொழி என்றனர்.

குழந்தைக்கு இளமையிலேயே ஊட்டும் தாய்ப் பால் போன்றது தாய்மொழி. மூளை வளாச்சிக்கும் சிந்தனைச் செயற்பாட்டிற்கும் தாய்மொழியே முதலானதாகும். பின்னா பின்னா அமையும் கல்விச் சோக்கையில் பிற பிறமொழிகள் இணைந்தாலும் தாய்மொழி உணாவுடன் கூடிய சிந்தனை முகிழ்ப்பே அடிப்படையானது. அந்த வகையில் ஒரு காலத்தின் கட்டாயத்தால் உருவானதே உலகத் தாய்மொழி நாள் கொண்டாட்டமாகும். பெப்ரவரி 21ஆம் நாள் உலகத் தாய்மொழி நாள்.

தாய்மொழி என்ற தமிழ்த் தொடரை ஆங்கிலத்தில் பரவலாக 'மதா டங்' என்பா. 'டங்' என்றால் 'நாக்கு'. அந்நாக்கு மொழி உருவாவதற்குக் காரணமாய் இருந்ததன் குறிப்பால் 'லேங்குவேஜ்' என நேரிடையாக மொழியைக் குறிக்கும் சொல்லாகக் கூறாமல் நாக்கைக் குறியீடாகப் பயன்படுத்தியதுதான் நுட்பமான அறிவியல்.

மனிதனைத் தவிர நாக்குள்ள எந்த உயிரினமும் உண்பதற்கு மட்டுமே நாக்கைப் பயன்படுத்தினாலும் அதனால் மொழியை உருவாக்க முடியவில்லை. மனித உயிரினம் மட்டும் உண்ணப் பயன்படுத்தியதோடு மொழி உருவாக்கத்தையும் செய்ததால் உலகம் நாக்கால் உச்சரித்த மொழியால் உருவானது எனலாம்.

இதைத்தான் திருவள்ளுவா,

நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று

என்று சொல்வன்மை அதிகார முதற்குறளில் (641) பதிவு செய்துள்ளார்.

சொல்வன்மை என்ற அதிகாரம் பேச்சாற்றலைப் பற்றியதாயினும் அப்பேச்சு நாக்கினால் உருவான மொழியாய் வெளிப்பட்டுப் பேசப்பேச, பேசியதைக் கேட்டோர்க்குச் சிந்தனைக் கிளாச்சியால் ஆராய்ச்சி உருவானதன் விளைவால் பல கண்டுபிடிப்புகள் ஏற்பட, உலகம் விரிவடைந்த வண்ணமாய் உள்ளது என்ற அடிப்படைக்கு மொழியே காரணம் எனக் கோடிட்டுக் காட்டுவதே இக்குறளாகும்.

அதாவது மொழியாலன்றி வேனொலும் பிரபஞ்சப் பெருக்கம் இல்லை என்ற குறிப்பின் உள்ளடக்கத்தைக் கொண்டது இக்கு.



இந்த அடிப்படை உணாவில் அவரவா தாய்மொழி அவரவாக்கு உயாவு என்பதால் பொதுவாக உணரப்பட்ட அவ்வுணாவு சிறப்பாகப் பரிணமிக்கும் வகையில் உலகம் முழுவதும் ஒரே நாளில் கொண்டாடுவதற்கான சூழல் உருவானதற்கு அமைந்த வரலாற்று நிகழ்வே இன்றைய உலகத் தாய்மொழி நாள் எனத் தலைப்பிடக் காரணமானது எனலாம்.

ஒரே நாடாக இருந்த நம் பாரதமும் பாகிஸ்தானும் 1947ஆகஸ்ட் 15 அன்று இருவேறு நாடுகளாயின. பிரிந்து சென்ற பாகிஸ்தானின் பகுதிகள் இந்தியாவின் மேற்கிலும் கிழக்கிலுமாக இருந்தன.

ஒரே மதத்தினராக அவ்விரு பகுதி மக்கள் வாழ்ந்தாலும் அவாகளின் மொழிகள் வெவ்வேறாக இருந்தன. அதிக எல்லைப் பரப்புடைய மேற்கில் உருது மொழி தேசிய மொழியாக இருந்தது. ஆனால், கிழக்குப் பகுதியில் வங்கமொழியே பெரும்பான்மையாக இருந்தது. இந்நிலையில் வங்கமொழி மக்கள் மீது உருது மொழி திணிக்கப்பட்ட நிலையில் அதை ஏற்க மறுத்ததால் வங்கமொழி இயக்கம் 1952 பிப்ரவரி 21இல் உருவானதன் தொடாச்சியில் போராட்டம் வெடித்தது.

நாட்டுப் பிரிவினைக்கும் வழிவகுத்த இப்போராட்டத்தில் அதிகமாக வங்கதேச இளைஞாகளே தங்களைத் தியாகம் செய்ய முன்வந்தனா. குறிப்பாக டாக்கா பல்கலைக்கழக மாணாக்காகள் பொதுமக்களின் ஆதரவுடன் நடத்திய பேரணியை பாகிஸ்தான் அரசு தடை செய்தது.

மாணாக்காகளின் கட்டுக்கடங்காத போராட்ட உணாவில் எழுந்த கிளாச்சியால் காவல் துறையின் துப்பாக்கிச்சூடு நிகழ்ந்தது. அதில் ஐந்து மாணாக்காகள் இரையாயினா. நூற்றுக்கணக்கானோா காயமடைந்தனர்.

தாய்மொழிக்காகத் தம் இன்னுயிரை ஈகம் செய்த இந்த நிகழ்ச்சி, உலக வரலாற்றுப் பேரேட்டில் துயரம் தோய்ந்த பக்கமாக அமைந்துவிட்டது. அத்துயர நிகழ்வு நடந்த 'சாகிதுமினாா்' என்ற இடம் ஒவ்வோராண்டும நினைவேந்தலுக்குரிய இடமானது. அந்த நாள் அந்நாட்டின் பொது விடுமுறை நாளானது.

இந்நிலையில் 1956 இல் வங்கமொழி தேசிய மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டதோடு பிப்ரவரி 21 ஐ உலகமே நினைந்து பார்க்குமாறு செய்ய வங்கதேச அறிஞா ரபீக்குல் இஸ்ஸாம் போன்றோா எடுத்த முயற்சியால் பன்னாட்டுப் பொதுமன்ற (ஐ.ந. சபை) ஒப்புதலுடன் உலகத் தாய் மொழியின் உரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு யுனெஸ்கோ ஏற்றுப் போற்றி அறிவித்ததுதான் உலகத் தாய்மொழி நாளாகும்.

இதன் உருவாக்கம் மொழியால் அமைந்தாலும் இதன் அடிப்படையானது பல்வேறு சமூகங்களின் மொழி, பண்பாட்டுத் தனித்தன்மைகள் பேணுவது போன்றவற்றுக்கிடையிலான ஒற்றுமையை உணர வைக்கும் எண்ணத்தோடு செய்த யுனெஸ்கோவின் தொண்டு, தொல்லுலகத் தாய்மொழி தினத்தின் சித்திரை நிலவான முத்திரைப் பதிவானது எனலாம்.

இங்ஙனம் வடிவெடுத்து வரையறுக்கப்பட்ட யுனெஸ்கோவின் கொள்கை யானது தாய்மொழி வழியில் பன்மொழி அறிதலை வலியுறுத்துவதாகும். தாய்மொழியில் கற்பது அவரவா அடிப்படை உரிமை என வற்புறுத்தியதோடு, உலக மக்கள்தொகையில் நாற்பது விழுக்காட்டினாக்கு அவரவா பேசும் மொழியில் கல்வி கிடைப்பதில்லை என்பதால் அதை இந்தப் புதுயுகக் கணினி வளாச்சியின் ஒருங்கிணைப்பாகக் காண்பதற்கு உதவுவதை இன்றைய உலகத் தாய்மொழி நாளில் உறுதி கொள்வோமாக!

காலைக்கதிர் Kalaikkathir



## மொட்டுக்கு ரணில் ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொட்டு உறுப்பினர்களுக்கு மாத்திரமே வழங்கியுள்ளார்.

மக்கள் ஆணையும், மக்கள் நம்பிக்கையும் இல்லாத இந்த அரசு தான் றோன்றித்தனமான அரசியலில் ஈடுபட்டு தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம்.

மக்களின் தேர்தல் உரிமையில் தலையிட்டால் அதற்கு எதிராக வீதியில் இறங்குவோம்.

இந்தத் தேர்தலை ஒத்திவைக்க ஆதரவளித்த அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் – என்றார்.

## மன்னார், பூநகரியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இரு இடங்களிலும் 442 மில்லியன் டொலர் செலவில் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அதானி கிறீன் எனர்ஜி நிறுவனம் அமைக்கவுள்ளது.

மன்னாரில் அமையவுள்ள நிலையம் 250 மெகா வாற் மின் உற்பத்தித் திறனையும் பூநகரி நிலையம் 100 மெகா வாற் உற்பத்தித் திறனையும் கொண்டதாக இருக்கும்.

இன்னும் இரண்டு வருடங்களுக்குள் இந்தத் திட்டங்களை முழுமைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு நாட்டின் தேசிய மின் உற்பத்திவலையமைப்பில் இங்கிருந்து கிடைக்கும் மின்சாரம் இணைக்கப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் 1500 முதல் 2000 ஆயிரம் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் என்று முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் அதானி நிறுவனம் முறையற்ற விதத்தில், மோசடிகள் மூலம் தனது பங்கு மதிப்புகளை உயர்த்திக்காட்டி அதன் மூலம் பெரும் தொகைப் பணத்தை வங்கிகளிடம் இருந்து கடனாகப் பெற்றுள்ளது என்று அண்மையில் குற்றஞ்சாட்டுக்கள் எழுப்பப்பட்டன. அது தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மிகவும் நெருக்கமானவர் வர்த்தகர் அதானி என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

## புதிய வரியை நீக்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வரி திருத்த சட்டத்தை மீளப் பெறுமாறு வலியுறுத்தி பெற்றோலியம், துறைமுகம், மின்சாரம், நீர் வழங்கல், வங்கி, வைத்தியத்துறை மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட சுமார் 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து புதன்கிழமை கொழும்பு – கோட்டையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

நண்பகல் 12 மணியளவில் கோட்டை தொடருந்து நிலைய வளாகத்தில் குவிந்த இந்த தொழிற்சங்கங்களின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களால் வீதியின் ஒரு பகுதியூடான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டது.

கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறும், கறுப்புப் பட்டிகளை அணிந்தவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசுக்கு எதிராக பெருங்குரலில் முழக்கமிட்டனர்.

போராட்டக்காரர்கள் பல வழிகள் ஊடாகவும் ஜனாதிபதி மாளிகை நோக்கி முன்னேறக்கூடும் என்கிற எதிர்பார்ப்பில் முற்பகல் 11 மணி முதல் மாலை 7 மணி வரை ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி செயலகம், நிதி அமைச்சு மற்றும் காலி முகத்திடல் பகுதிகளுக்குள் நுழைவதற்கு 9 ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றிருந்தது பொலிஸ்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகை மற்றும் நிதி அமைச்சு ஆகிய அமைந்துள்ள இடங்களுக்குள் நுழைய முடியாதவாறு சகல வீதிகளிலும் பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததோடு, நீர்தாரை பிரயோக வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

ஆனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடருந்து நிலையம் முன்பாக மட்டுமே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சில மணி நேரத்தில் அவர்களாகவே கலைந்து சென்றனர்.

## உள்ளூராட்சி மன்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் தட்டுப்பாடு , வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி, பாதுகாப்பிற்கு பொலிஸார் வழங்கப்படாமை மற்றும் பணம் வழங்க நிதி அமைச்சு மறுத்திவிட்டமை போன்ற காரணங்களால் தேர்தல் ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்டுவிட்டது.

அதை இனி தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க வேண்டியது மட்டும்தான் எஞ்சியிருக்கின்றது என்றார் அவர்.

இதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் யார் என்ற கேள்விக்குப் பதில் கூற மறுத்துவிட்டார் அவர்.

"துடுப்பாட்ட களத்தில் இருப்பவரால் மாத்திரமே பந்தை எவ்வாறு கையாள முடியும் என்பதைக் கூற முடியும். பார்வையாளர்களால் அதனைக் கூற முடியாது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜப்பான் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிரிவர்தன மற்றும் ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி (Mizukoshi Hideaki) ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையின்படி ஜப்பான் அரசு இலங்கைக்கு 20 மில்லியன் லீற்றர் டீசலை வழங்கவுள்ளதாகவும் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில் இலங்கையில் மருத்துவ சேவைகளை இலகுபடுத்தும் நோக்கில் இந்த மனிதாபிமான உதவி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இந்திய மீனவரை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மீனவர் அத்துமீறலுக்கான தீர்வாக அவர்களுக்கு இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க அனுமதி வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது என்று அயலுறவுத் துறை அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றத்தில் தெரிவித்ததற்குப் பதிலளித்துப் பேசிய கஜேந்திரன், இந்தத் திட்டத்திற்குத் தமது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

அப்படி நடந்தால் மக்களை அணி திரட்டி போராட்டம் நடத்துவோம் என்று எச்சரித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கடலில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படவுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டது. தமிழரை காட்டிக்கொடுத்த ஈபிடிபி நபரை மீன்பிடி அமைச்சராக வைத்துக்கொண்டு விரலால் கண்ணைக் குத்தும் வேலைகளை இந்த ஆட்சி செய்கின்றது.

இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்போவதாக வெளிப்படையாகவே கூறுவதை நாங்கள் ஏற்கமுடியாது. அதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் அவ்வாறு நடந்தால் அதற்கு எதிராக தமிழ்த் தேசிய மக்களை அணி திரட்டி போராடும் – என்றார்.

இதேவேளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வடக்கிற்கு சென்று மக்களின் மூளை சலவை செய்யும் செயற்பாடுகளை மேற்கொள்கிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தமிழ் இனப் படுகொலைக்காகவும் போர்க் குற்றங்கள் தொடர்பாகவும் சர்வதேச விசாரணைக்குத் தமிழ் மக்கள் வலியுறுத்திவரும் நிலையில், வடக்குக்கு வந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளக விசாரணைக்கு நடவடிக்கை எடுப்பதை போன்று கூறியதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்தார்.

பெப்ரவரி 11ஆம் திகதி ஜனாதிபதியால் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திர தின களியாட்ட நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தாம் நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பில் தான் உட்பட தமது கட்சியைச் சேர்ந்த 18 பேர் கைது செய்யப்பட்டபோது தாக்கப்பட்டனர் என்றும் தம்மீது பொலிஸார் பொய் வழக்குகளைத் தொடுத்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

"இன்று தேர்தலை நடத்த நிதி இல்லை என்று கூறிக்கொண்டு பெரஹறா என்ற பெயரில் ஜனாதிபதி பணத்தை வீணடித்துக்கொண்டிருக்கின்றார். முறைகேடான வகையில் அரசு பணத்தை செலவிடுவது ஏற்றுக்கொள்ள முடியாதது" என்றார் அவர்.

## விமலின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை தெரிவித்தார் தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரசன்ச.

அண்மையில் இலங்கைக்கு வந்து திரும்பிய அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் அதிகாரிகள் ஏன் வந்தார்கள், எவ்விடயம் தொடர்பில் பேச்சு நடத்தினார்கள் என்பதை ஜனாதிபதி அல்லது பிரதமர் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்காவின் பென்டகன் முதன்மை பிரதி பாதுகாப்பு செயலர் ஜெடிடியா பிறோல் தலைமையில் 22 பேர் பாதுகாப்பு அதிகாரிகள் ஆயுதம் தரித்து தேசிய புலனாய்வுத் திணைக்களத்திற்குள் பிரவேசிக்கும் போது எமது புலனாய்வு அதிகாரிகளின் ஆயுதம் கலைக்கப்பட்டு நிராயுதபாணிகளாக்கப்பட்டனர் என்றும் அவர் விசனம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சிறப்புக் கூற்றை முன்வைத்து அவர் உரையாற்றினார்.

"அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவி செயலாளர் விக்டோரியா நூலண்ட் இலங்கைக்கு வந்து திரும்பிய ஓரிரு வாரங்களுக்குள் அமெரிக்காவின் முதன்மை பிரதி பாதுகாப்புச் செயலர் ஜெடிடியா பி றோல் தலைமையில் 22 பேர் அடங்கிய குழுவினர் கடந்த 16 ஆம் விசேட விமானம் ஊடாக இலங்கையை வந்தடைந்தார்கள்.

அவர்கள் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களுடன் பேச்சு நடத்தினார்கள். அத்துடன் அவர்கள் தேசிய பாதுகாப்பு புலனாய்வு பிரதானியை சந்தித்துப் பேசியவுடன் நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

அமெரிக்காவின் பென்டகன் பாதுகாப்பு தரப்பு அதிகாரிகள் சிறப்பு விமான சேவை அதாவது ஜனாதிபதியின் சிறப்பு விமான சேவை ஊடாக இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள். அத்துடன் இவர்கள் நாட்டுக்கு வருகை தந்த விவகாரம் குறித்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திடம் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கையின் புலனாய்வு தகவல்களை அமெரிக்காவின் மத்திய புலனாய்வு சேவையின் கீழ் கொண்டு வர பென்டகன் அதிகாரிகள் முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. இவ்வாறான சம்பவம் 2001 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்றது. 2004 ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622




யாழில்
சஜித்
பிரேமதாச
கௌரவ சஜித் பிரேமதாச அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகள்
2023.02.23
காலை 8.30 யாழ் பேராயர் சந்திப்பு
காலை 9.00 நல்லை ஆதின முதல்வர் சந்திப்பு
காலை 10.00 அனலைதீவு ஐயனார் கோவிலடி பொதுக்கூட்டம்
மாலை 2.00 கொம்பனிப்புலம், சண்டிலிப்பாய் பொதுக்கூட்டம்
மாலை 4.00 மூளாய் பிள்ளையார் கோவிலடி பொதுக்கூட்டம்
மாலை 5.00 பாரதி விளையாட்டுக் கழகம், அளவெட்டி பொதுக்கூட்டம்
மாலை 6.30 றக்கா வீதி, சுண்டுக்குழி மாபெரும் பொதுக்கூட்டம்
2023.02.24
காலை 8.30 நாக விகாராதிபதி சந்திப்பு
காலை 9.00 பச்சைப்பள்ளி வழிபாடு (நாவலர் வீதி)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அ.கிருபாகரன்
(கிருபா லேணர்ஸ் அதிபர்)
அமைப்பாளர்
ஐக்கிய மக்கள் சக்தி
X

**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**

பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 10 புதன்கிழமை 22.02.2023 கதிர் 357

## இலங்கையில் மீண்டும் இன்று சிறு நில அதிர்வு



புத்தல, வெல்லவாய பகுதிகளில் இன்று முற்பகல் மீண்டும் சிறு நில அதிர்வு ஏற்பட்டுள்ளது என்று புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது ரிச்டர் அளவீட்டு கருவியில் 3.3 புள்ளி அளவில் பதிவாகியுள்ளது. 2

# அரசுக்கு எதிராக இன்றும் கோட்டையில் போராட்டம்

## தொழிற்சங்கத்தினர் அணிதிரண்டு முழக்கம்



அரசின்வரிவிதிப்பு மற்றும் அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச மற்றும் தனியார் நிறுவனங் களைச் சேர்ந்த பெருமளவான தொழில் வல்லுநர்கள் கொழும்பில் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக அவர்கள் அணிதிரண்டு விண்ணதிரக் முழக்கமிட்டு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட னர். அரசின் வரிக் கொள்கை திரும்பப் பெறப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். 6

## அரசியல் கைதிகள் 21 பேர் நேற்று குற்றச்சாட்டுகளின்றி நீதிமன்றால் விடுதலை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பிணை வழங்கப்பட்டிருந்த 21 தமிழ் அரசியல் கைதிகள் அனைத்து வழக்குகளில் இருந்தும் முழுமையாக விடுவிக்கப்பட்டனர்.

கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில், இது தொடர்பான விசாரணைகள் நேற்று இடம்பெற்ற நிலையில், அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள் உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சுமத்தி, 2014 ஆம் ஆண்டு அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள், வவுனியா, கிளிநொச்சி மற்றும் பூசா முகாம் ஆகிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பல நிபந்தனைகளின் அடிப்படையில் 2015 மற்றும் 2016ம் ஆண்டுகளில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் குறித்த 4 பெண்கள் உள்ளிட்ட 21 பேரும் எவ்வித நிபந்தனைகளுமின்றி அவர்களது சகலவழக்குகளில் இருந்தும் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## இந்திய விசா அலுவலக திருட்டு: 5 பேர் கைது!

இந்திய விசா விநியோக அலுவலகத்தில் மடிக்கணினி மற்றும் டி.வி.ஆர். இயந்திரம் என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிருலப்பனை மற்றும் வெள்ளவத்தை பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் 2

## மன்னித்து ஏற்கத் தயார்!

### டலஸ் அணிக்கு 'மொட்டு' அழைப்பு



உங்களுக்கு மன்னிப்பு வழங்க நாம் தயார். மீண்டும் எங்கள் கட்சி பக்கம் வாருங்கள்.

– இவ்வாறு ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து வெளியேறியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் எங்கள் பக்கம் வருவதற்கு முற்படுகின்றனர். அவர்களை நாம் வரவேற்கின்றோம். மன்னிப்பு வழங்குவதற்குத் தயாராகவே இருக்கின்றோம்.

மேலும் சிலர் ஜனாதிபதியிடம் இரகசியமாக அமைச்சுப் பதவிகளைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்'' – என்றார்.

டலஸ் அழகப்பெரும அணியை இலக்கு வைத்தே மஹிந்தானந்த இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

## முட்டாள்தன முடிவை எடுக்கும் நாடாக மாறியுள்ளது இலங்கை

### சாடுகின்றது டலஸ் அணி



இலங்கை தற்போது கெகில்லே மன்னரின் அரச சபை எடுத்த முடிவுகள் போன்ற நகைச்சுவை–யான மற்றும் முட்டாள்தனமான தீர்மானங்களை எடுக்கும் நாடாக மாறியுள்ளது.

– இவ்வாறு டலஸ் அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி, நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் அரச அச்சக அதிபர் ஆகியோர் இணைந்து மக்களின் வாக்குரிமையை நீக்க முயற்சித்து வருகின்றனர். எனினும், சில அதிகாரிகளின் தேவைக்கு அமைய அதனைச் செய்ய முடியாது.

இலங்கையில் முதல் முறையாக இப்படியான சம்பவம் நடந்துள்ளது. தேர்தலை ஒத்திவைக்க முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவுக்கு அன்று அடிப்படையான காரணங்கள் இருந்தன. தேர்தல் ஒத்திவைக்கப்படுவது நாட்டுக்கு நடக்கும் மிகவும் கெடுதியான செயல். 2

## முன்னணியினர் மீதான வழக்கு ஜூன் 14க்கு ஒத்திவைப்பு

நீதிமன்றத் தடையை மீறி யாழ். நகரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 18 உறுப்பினர்களுக்கு எதிரான வழக்கு ஜூன் மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பெப்ரவரி 11ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு எதிராக யாழ். நகரில் போராட்டம் நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் 18 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அன்று இரவே அனைவரும் பதில் நீதவானிடம் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுக்கப்பட்டனர்.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு 2

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## மைத்திரியின் மேன்முறையீடு மீது மார்ச் 1 நீதிமன்ற தீர்ப்பு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீடு கோரி, தாக்கல் செய்துள்ள தமக்கு எதிரான அனைத்து வழக்குகளையும் நிராகரிக்குமாறு கோரி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதாக்கல்செய்துள்ள மேன்முறையீட்டு மனுவின் தீர்ப்பு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் பாதிகப்பட்டுள்ளவர்கள் இழப்பீடு கோரி, கொழும்பு மாவட்ட நீதிமன்றில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால 2

## சிக்கியது கார்!

தென்மராட்சி, பெப்.22

நாவற்குழி எரிபொருள் நிரப்பு நிலைய வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் கார் ஒன்றை சாவகச்சேரிப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நாவற்குழியில் உள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையில் இருந்த ஊழியர் ஒருவரை கடந்த வாரம் வியாழக்கிழமை நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றனர்.

கியூ ஆர் இன்றி எரிபொருள் வழங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் மறுத்தமைக்குப் பழிவாங்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல் 2

## புலம்பெயர்வை தடுப்பது குறித்து ஐஓஎம் குழு குடாநாட்டில் ஆய்வு

புலம்பெயரிகளுக்கான சர்வதேச அமைப்பின் (ஐ ஓ எம்–IOM) தூதுக்குழுவினர் இன்று யாழ். மாவட்டச் செயலர் சிவபாலசுந்தரனைச் சந்தித்து யாழ். மாவட்டத்திலிருந்து சட்டவிரோதமான புலம்பெயர்வுகளைத் தடுப்பது தொடர்பில் 2



## புலம்பெயர்வை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடினர். ஐஓஎம் இலங்கை உதவி வதிவிடப் பிரதிநிதி தலைமையிலான குழுவினர் இன்று காலை 10.30 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகத்திற்கு வந்து இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது, தொழில் வழிகாட்டல்களை வழங்குவது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

## இந்திய விசா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கிருலப்பனை பகுதியிலுள்ள ஓடையொன்றில் வீசப்பட்டிருந்த நிலையில் திருடப்பட்ட மடிக்கணினி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் 63 வயதான பெண் ஒருவரும் அடங்குகின்றார்.

கொழும்பு – தும்முல்ல பகுதியிலுள்ள இந்திய விசா அலுவலகத்துக்குள் கடந்த 14ஆம் திகதி இரவு புகுந்து அங்கிருந்து மடிக்கணினி மற்றும்டி.வி.ஆர். இயந்திரம் என்பவற்றைத் திருடியவர்கள் தப்பிச் சென்றிருந்தனர்

## இலங்கையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெல்லவாயவை அண்மித்த பகுதியில், 7 கிலோ மீற்றர் ஆழத்தில், இலங்கை நேரப்படி முற்பகல் 11.44 மணியளவில் இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது என்று புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கோரியுள்ளது.

இதேவேளை, கடந்த 10ஆம் திகதி இலங்கையின் தென்கிழக்கு நகரங்களில் 3.0 ரிச்டர் புள்ளி அளவில் சிறிய நில அதிர்வுகள் ஏற்பட்டன. எனினும், அதனால் எந்த ஆபத்துக்களும் ஏற்பட்டிருக்கவில்லை.

இது ஓர் அதிர்வு மட்டுமே, பூகம்பம் அல்ல என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னணியினர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தது இன்றையதினம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற போது ஜூன் மாதம் 14 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## முட்டாள்தன.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பொருளாதாரத்துக்குச் செய்ய முடிந்த கெடுதியை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச செய்தார். தற்போதைய ஜனாதிபதி அதன் அடுத்த கட்டத்தை செய்து வருகின்றார்.

தற்போதைய அரசின் வரி கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். ரூபாவில் மின்சாரக் கட்டணங்களை அதிகரித்து மின் துண்டிப்பை நிறுத்த முடிந்தது.

ரூபாவில் மின் கட்டணத்தை அதிகரித்த போது அதன் மூலம் டொலர் எப்படி கிடைத்தது என்பது கேள்விக்குறி. மின் கட்டணம் அதிகரிக்கப்பட்ட விதம் சம்பந்தமாகவும் சிக்கல் ஏற்பட்டது – என்றார்.

## மைத்திரியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக, வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்தநிலையில், குறித்த வழக்கின் தீர்ப்பானது, மேல் மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில், இன்று அறிவிக்கப்படவிருந்தது.

எவ்வாறாயினும், எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி வரையில் குறித்த வழக்கின் தீர்ப்பு பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

தாக்குதலைத் தடுப்பதற்குப் போதுமான தகவல்கள் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், அதற்கான உரிய நடவடிக்கை எடுக்காமைக்காக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக, பாதிக்கப்பட்டவர்கள் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் 108 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

## சிக்கியது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டதாகக் கருதப்பட்டது. இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் சி.சி.ரி.வி. காணொலிகளை அடிப்படையாகக் கொண்டு சம்பவத்துடன் காரில் வந்திருந்தவர்களுக்கும் தொடர்பிருப்பதாகச் சந்தேகித்தனர். அந்தக் காரைத் தேடிவந்தனர்.

செவ்வாய்க்கிழமை இரவு பொலிஸாரின் சைகையை மீறி தப்ப முயன்ற ஒரு காரைப் பொலிஸார் துரத்திச் சென்றபோது நாவற்குழி–கோவிலாக்கண்டிப் பகுதியில் காரைக் கைவிட்டுவிட்டு அதிலிருந்தவர்கள் தப்பிச் சென்றிருந்தனர். அந்தக் காரே நாவற்–குழி எரிபொருள் நிரப்பு நிலைய வாள்வெட்டுடனும் தொடர்புடையது என்று சந்தேகிக்கும் பொலிஸார் அதனைக் கைப்பற்றி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர்.



# சாதிப் பாரபட்சத்துக்கு எதிராக சீயாட்டில் நகர சபை தீர்மானம்

அமெரிக்காவின் வொஷிங்டன் மாநிலத்தில் உள்ள துறைமுக நகரான சியாட்டில், சாதி ரீதியான பாரபட்சங்களை தடை செய்துள்ளது. இது தொடர்பான தீர்மானம் சியாட்டில் மாநகர சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இதன் மூலம் அமெரிக்காவில் சாதிப் பாகுபாடுகளுக்கு உத்தியோகபூர்வமாக தடை விதித்த முதலாவது நகரம் என்ற பெயரை சியாட்டில் பெற்றுள்ளது.

அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரான ஈமா சாவந்த் இந்தத் தீர்மானத்துக்கான பிரேரணையை முன்வைத்திருந்தார். தீர்மானத்தை 6 உறுப்பினர்கள் ஆதரித்தனர். ஒருவர் எதிர்த்தார்.

தெற்காசியாவிலிருந்து புலம்பெயர்ந்தவர்களால் அமெரிக்காவுக்கு சாதிப் பாகுபாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக சமூகச் செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்ட சிஸ்கோ நிறுவனம் சாதிப் பாகுபாடு தொடர்பான வழக்கு ஒன்றை எதிர்கொண்டுள்ளது. தனது சாதி காரணமாக தான் பாரபட்சமாக நடத்தப்பட்டதாகக் கூறி முன்னாள் ஊழியர் ஒருவர் இந்த வழக்கை தொடுத்துள்ளார்.

இந்நிலையில், வொஷிங்டன் மாநிலத்தில் 167,000 தெற்காசியர்கள் வசிக்கின்றனர். அவர்களில் அதிகமானோர் சியாட்டில் பெரும்பாகப் பிராந்தியத்தில் வசிக்கின்றனர். இந்நிலையில், சாதிப் பாரபட்ச விவகாரம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்கிறார் ஈமா சாவந்த்.

அமெரிக்க தலித் அமைப்புகள் இத்தடையை வரவேற்றுள்ளன.

தலித் உரிமைகள் அமைப்பொன்றின் பணிப்பாளரான தேன்மொழி சௌந்தரராஜன் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், 'நாட்டில் முதலாவதாக, சியாட்டில் நகரம் சாதிப் பாகுபாட்டை தடை செய்ததன் மூலம், வெறுப்புணர்வை அன்பு வென்றுவிட்டது' எனத் தெரிவித்தார்.

அமெரிக்க இந்து மன்றம் இத்தடை தொடர்பில் அதிருப்தி தெரிவித்துள்ளது.

'சாதிப் பாரபட்சங்கள் தவறானவை. ஆனால், சியாட்டில் நகரின் நடவடிக்கை தெற்காசிய சமூகத்தினரை தனிமைப்படுத்துகிறது' என அம்மன்றம் கூறியுள்ளது.

ஆனால் இந்த வெற்றியை அமெரிக்கா முழுவதும் பரப்புவதற்கான இயக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும் என வாக்கெடுப்பின் பின்னர் ஈமா சாவந்த் கூறினார்.

# உதயசூரியன் கலையரங்கம் திங்களன்று திறந்து வைப்பு

தென்மராட்சி, பெப். 22

கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 44ஆவது ஆண்டு விழாவும்–கலையரங்கத் திறப்பு விழா திங்கட்கிழமை பிற்பகல் சனசமூக நிலைய வளாகத்தில் இடம்பெற்றன.

உதயசூரியன் சனசமூக நிலையத் தலைவர் வேலாயுதம் குகன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு கலையரங்கத்தைத் திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினராக சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவனும்,

கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், உதயசூரியன் சனசமூக நிலைய லண்டன் நிர்வாக உறுப்பினர் க.சந்திரகுமார், சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேலு மற்றும் சுதந்திரக்கட்சியின் கைதடி 7ஆம் வட்டார அமைப்பாளர் நா.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொண்டனர். இதன்போது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு, விருந்தினர்கள் கௌரவிப்பு மற்றும் நடனப் போட்டிகள் ஆகியன இடம்பெற்றிருந்தன.






# நெல்லின் உத்தரவாத விலையை ரூ. 150ஆக உயர்த்தக் கோரிக்கை

## சம்மாந்துளை பிரதேச சபையில் தீர்மானம்

(அகீல்)

இலங்கையின் முக்கிய விவசாய மாவட்டமான அம்பாறை மாவட்டம் உட்பட மேலும் சில பகுதிகளில் பெரும்போக நெல் அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில் நெல்லின்

உத்தரவாத விலையை ஒரு கிலோ 150 ரூபாவாக உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

நெல்லுக்கான உத்தரவாத விலையை ஆட்சியாளர்கள் அதிகரிக்கவேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்று சம்பாந்துறை பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சம்பாந்துறை பிரதேச சபையின் 59ஆவது மாதாந்த சபை அமர்வு சபையின் புதிய தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் தலைமையில் திங்கட்கிழமை நடைபெற்றது. அதிலேயே நெல்லின் உத்தரவாத விலையை அதிகரிக்கக்கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிலோ ஒன்றுக்கு நூறு ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு நெல்லின் விலையை விவசாயிகளின் நலன்கருதியும் நஷ்டத்திலிருந்து அவர்களைக் கைதூக்கி விடும் வகையிலும் உடனடியாக 150 ரூபாவாக உயர்த்த வேண்டுமென அந்தத் தீர்மானம் வலியுறுத்தியது. மேற்படி தீர்மானம் தொடர் பான பிரேரணையை உபதவி சாளர் ஏ.அச்சிமுகம் மது சபையில் முன்மொழிந்தார்.

“நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் விவசாயிகள், நெல்லுக்கு உரிய நியாயமான விலை கிடைக்காமல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். நெற்செய்கைக்கென பெரும் முதலீடுகளைச் செய்யவேண்டிய நிலைக்குத்

தள்ளப்பட்டுள்ளனர் விவசாயிகள். உரம், கிருமிநாசினிகள் மற்றும் களை நாசினிகளைப் பெற்றும், விதைப்பு மற்றும் அறுவடைக் கூலிகள் உயர்ந்த நிலையிலும் நெல்லுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவாத விலை போதுமானதில்லை. விவசாயிகளுக்கு அது போதுமானதாக இல்லை. எனவே குறைந்தது ஒரு கிலோ நெல்லை 150 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று தெரிவித்தார் அச்சிமுகம்மது. “அம்பாறை மாவட்டத்தில் நமது சம்மாந்துறைப் பிரதேச மக் களின் முக்கிய தொழில். விவசா யமே.

தற்போது பல நெருக்கடிகளையும் விலை உயர்வுகளையும் அனுபவித்தே விவசாயத்தைச் செய்யவேண்டியிருக்கிறது. நெல்லின் விலை வீழ்ச்சி காரணமாக இன்று விவசாயிகள் விரக்தி நிலைக்கு உட்பட்டுள் ளதுடன் பெரும் பொருளாதார நெருக்கடியையும் எதிர் கொண் டுள்ளனர். எனவே நெல்லின் உத்தரவாத விலை அதிகரிக்கப்பட வேண்டிய அவசியமாகும்.” என்றார் சபையின் தவிசாளர்.

“இன்றைய காலத்தில் வழக்கமான விளைச்சலைக் கூடப் பெறமுடியாது விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

ஒரு ஏக்கருக்கு 40 தொடக்கம் 50 மூடைகள் வரை முன்னர் நெல் விளைச்சல் கிடைத்தபோதும் தற்சமயம் ஏக் கருக்கு 25 அல்லது 30 மூடைக ளுக்குள்ளேயே விளைச்சல் கிடைக்கிறது.

எனவே நெல்லின் உத்தரவாத விலையை உடனடியாக அதிகரிக்க ஜனாதிபதியுடன் இணைந்து விவசாய அமைச்சு ஆவண செய்ய வேண்டும்.” என்றார்.

உறுப்பினர்களான எஸ்.நளீம், ஏ.யூசுப்லெவ்வை உட்பட மேலும் சில உறுப்பினர்களும் பிரேரணை மீது உரையாற்றியதைத் தொடர்ந்து, நெல்லின் உத்தரவாத விலையை ஒரு கிலோ 150 ரூபாவாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கைத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்களை எதிர்க்கட்சிகள் முன்னெடுக்கவேண்டும்!

## சாணக்கியன் கோரிக்கை

உள்ளூராட்சித் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்ட விடயத்தில் இலங்கையில் உள்ள பிரதான எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தை மேற்கொள்ள முன்வரவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்பது தொடர்பாக மாறிமாறி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் இந்தத் தேர்தலை நடத்தக்கூறி நிச்சயமாக அரசாங்கத்துக்கு பாரிய அழுத்தத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடுகளை செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தை மதித்து செயற்படுபவராக இருந்தால் தேர்தலை நடத்தி இருக்க வேண்டும் என்றும் இரா.சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் ஒவ்வொரு மாதமும் அன்றாட செலவுகளை ஈடு செய்வதற்குத் தொடர்ச்சியாக கடனாளிகளாக மக்கள் மாறிக்கொண்டிருக்கின்றார்கள் என சுட்டிக்காட்டிய இரா. சாணக்கியன், மக்களுக்கான நிரவாரணத்தை வழங்க மக்களாணையுடன் அரசாங்கம் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.




# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் பிறந்த நாள் கல்லடியில்







(பழுவூரான்)

ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 188 ஆவது பிறந்த தினம் செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ணமினில் இடம்பெற்றது.

கல்லடி மின் முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தர் மகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மங்களாராத்தி, திருப்பள்ளியெழுச்சி, கொடியேற்றம், பூஜை, பஜனை இடம்பெற்றன.

பிறந்ததினத்தையொட்டி திங்கட்கிழமை மாலை ஸ்ரீ இராமகிருஷ்ணரின் உருவப்படம் தாங்கிய தேர், கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் மற்றும் ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய வளாகத்திலிருந்து தொடங்கி, புதிய கல்முனை வீதி வழியாக கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் வரை பவனி வந்தது. மீண்டும் விபுலானந்தா வீதி வழியாக ஸ்ரீ இராமகிருஷ்ணமினை வந்தடைந்தது.

# பதவியுயர்வு









(நூருல் ஹுதா உமர்)

கல்முனையில் நீண்ட காலம் சேவையாற்றிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

எம் ஐ ஹைதர், எம் எம் எம்.பைசல், எஸ் வேல்முருகு ஆகியோருக்கே மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது. இவர்களுக்குப் பதவியுயர்வுக் கடிதத்தை வழங்கி வைத்த கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம்.றிபாஸ், பொதுமக்கள் சேவைக்காக எடுக்கப்படும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் தானும் தனது உத்தியோகத்தர்களும் உதவ எப்போதும் தயாராக இருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் எம்.பி.ஏ வாஜித் மற்றும் பிராந்திய மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லாபீர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்

# கிழக்கில் நன்னீர் தடாக மீன் வளர்ப்பு ஊக்குவிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் நன்னீர் தடாக மீன் வளர்ப்பு திட்டம் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

விநாயகபுரம் -3 கிராம சேவகர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு இன்று 28000 மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் த. கஜேந்திரனின் வழிகாட்டலில் பிரதேச செயலக உதவிச்செயலாளர்க.சதிசேகரன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா, கிழக்கு மாகாண மீன்பிடி பிரிவின் மாவட்ட நீரியல் வள உத்தியோகத்தர் அ.ராஜிதன் மற்றும் திட்ட உத்தியோ கத்தர்கள் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயனாளர்கள் கலந்துகொண்டனர். பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் கைத்தொழில் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.ரவிந்திரனின் ஒழுங்குப்படுத்தலின் கீழ் நிகழ்வு இடம்பெற்றது.





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சியாட்டிலின் நல்ல முன்மாதிரி

அமெரிக்காவின் மேற்குக் கரையோரத்தில் உள்ள துறைமுக நகரம் சியாட்டில். அங்குள்ள மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் ஒன்று ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாநகர சபைக்குட்பட்ட இடங்களில் சாதிய ரீதியான பாகுபாட்டை, பாரபட்சங்களை முற்றாகத் தடை செய்வதாக இந்தத் தீர்மானம் தெரிவிக்கின்றது.

அமெரிக்கா போன்றதொரு நாட்டில் சாதிப் பாகுடா? அதைத் தடுக்க ஒரு தீர்மானமா? என்கிற ஆச்சரியத்தை இந்தத் தீர்மானம் ஏற்படுத்தினாலும் அது ஒரு முன்னெச்சரிக்கையான ஏற்பாடு என்பது தெரிகின்றது.

அமெரிக்காவின் இனவேறுபாடு, பாராபட்சம் உலகறிந்த விடயம். கறுப்பினத்தவர்களை அடிமைகளாக வைத்திருந்தது முதல் இன்றும் அவர்களை நிறவேறுபாடுகள் காரணமாக ஒதுக்குவதும் ஒடுக்குவதும்கூட அனைவரும் அறிந்ததே. ஆனால், சாதி எங்கிருந்து வந்தது?

அதைத் தெற்காசியர்கள் அமெரிக்காவிற்குள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சமூகச் செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். அதனால்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்குத் தான் முன்னிறு உழைத்தார் என்று அமெரிக்க – இந்தியரான ஈமா சாவந்த் தெரிவித்தார்.

சியாட்டிலில் கிடைத்த வெற்றியை அமெரிக்கா முழுவதும் பரப்ப வேண்டும் என்கிறார் அவர்.

சுமார் 7 லட்சம் பேர் வாழும் சியாட்டிலில் தெற்காசியர்களின் எண்ணிக்கை மட்டும் ஒன்றரை லட்சத்துக்கும் மேல். அதனாலேயே இங்கு சாதியும் முக்கியதுவம் பெற்றிருக்கிறது.

அமெரிக்காவில் சாதி ரீதியான பாரபட்சம் காட்டப்பட்டதாக ஏற்கனவே ஒரு வழக்கு நிலுவையில் இருக்கின்றது. சிஸ்கோ நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் சாதி காரணமாகத் தான் பாரபட்சமாக நடத்தப்பட்டார் என்று முறையிட்டிருக்கிறார்.

இந்தக் காரணங்களால்தான் சியாட்டில் சாதிப் பாரபட்சத்திற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

உண்மையில் சியாட்டிலைவிட தமிழர்கள் வாழும் இடங்களில்தான் இத்தகைய தீர்மானங்களும் சட்டங்களும் அதிகம் தேவைப்படுகின்றன. சியாட்டிலை முன்மாதிரியாகக் கொண்டு இங்குள்ள ஒவ்வொரு சபையும் சாதியப் பாகுபாடு, பாரபட்சத்துக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும்.

சாதி ரீதியான வேட்பாளர்களைத் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குத் தெரிவுசெய்யும் கலாசாரத்தைக் கொண்ட தமிழ் அரசியல் கட்சிகள் இத்தகைய தீர்மனங்களுக்கு இலகுவில் இணங்கி வரப்போவதில்லை. அதேநேரம் இத்தகைய தீர்மானம் ஒன்று முன்வைக்கப்படும்போது அதைப் பகிரங்கமாக எதிர்க்கும் துணிபும் அவற்றுக்குக் கிடையாது.

நானும் ரௌடிதான் என்கிற ரீதியில் அவையும் அந்தத் தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பதாகவே காட்டிக்கொள்ளும் எனவே இந்தச் சூழலைப் பயன்படுத்திக்கொண்டு முற்போக்குச் சக்திகள் ஒவ்வொரு சபையிலும் சாதிப் பாரபட்சம், பாகுபாட்டுக்கு எதிரானதும் சாதியப் பிரிவினைக்கு எதிரானதுமான தீர்மானங்களை நிறைவேற்ற முயலவேண்டும். அது ஒரு அடிப்படை மாற்றத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை இடும்.

# மக்களின் உரிமையைமீறும் செயல்களை ஏற்க இயலாது

## தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் கூறுகிறது

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் இடையூறு ஏற்படுத்துவதை முன்னிறுத்தி தேர்தல்கள் ஆணைக்குழு, திறைசேரி, அரச அச்சகக்கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பொலிஸ் ஆகிய 4 கட்டமைப்புக்களும் எவ்வாறு கூட்டிணைந்து செயற்பட்டிருக்கின்றன என்ற விடயம் தற்போது வெளிப்பட்டிருப்பதாகச் சாடியுள்ள தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், மக்களின் ஜனநாயக உரிமையை மீறும் வகையிலான அந்தக் கட்டமைப்புக்களின் செயற்பாட்டைக் கடுமையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாகத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு, திறைசேரி, அரச அச்சகக்கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பொலிஸ் ஆகிய 4 கட்டமைப்புக்களும் உள்ளூராட்சிமன்றத்தேர்தலில் இடையூறு ஏற்படுத்தும் வகையில் எவ்வாறு செயற்பட்டன என்பது பற்றித் தனித்தனியாக விவரிக்கப்பட்டுள்ளது. அவற்றின் சுருக்கம் வருமாறு–

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடுவதைத் தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டுத் தாமதப்படுத்தியமையே தற்போதைய 'தேர்தல் நெருக்கடிக்கான' அடிப்படையாக அமைந்தது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் கடந்த 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி தேர்தல்கள் தொடர்பில் அறிவிக்க வேண்டிய கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு இருந்தது.

இருப்பினும் அந்த அறிவிப்பு இந்த ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதிவரை தாமதப்படுத்தப்பட்டது. அதன் விளைவாகத் தேர்தலை நடத்தவேண்டிய தினத்துக்கு வெறுமனே 6 வாரங்களும், 5 நாள்களும் மாத்திரமே காணப்பட்டன.

அதேபோன்று தேர்தல் தினத்திலிருந்து அதன் பின்னர் தற்போதைய உள்ளூராட்சிமன்றங்களின் பதவிக்காலம் முடிவடைவதற்கு 11 நாள்கள் மாத்திரமே உள்ளன.

மேலும் ஊடகங்களின் வெளியான செய்திகளின் பிரகாரம் தேர்தல் தொடர்பான அறிவிப்பிற்கு முன்னரும் பின்னரும் இரு தடவைகள் நிறைவேற்றதிகார ஜனாதிபதியால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சந்திப்பொன்றுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவதன் ஊடாக தேர்தல்கள் ஆணைக்குழு இன்னமும் வாக்காளர்களுக்குப் பொறுப்புக்கூறவில்லை.

அதேவேளை, தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியானதன் பின்னர் 2023, ஜனவரி 30 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானமொன்றை மேற் கோள்காட்டி கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி திறைசேரியின் செயலாளரால் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்ட அரச செலவுகளின்மீது மட்டுப்பாடுகளை விதிப்பதானது நிறைவேற்றதிகாரத்தின் ஊடாக நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள நிதியியல் அதிகாரங்களை முழுவதுமாக மீறும் செயலாகும்.

வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்படுவதை நிறுத்துவதன் ஊடாக தேர்தல் செயன்முறையில் இடையூறு ஏற்படுத்துவதே இந்தச் சுற்றறிக்கையின் அறுதி நோக்கமாகும்.

அடுத்ததாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்களின் பிரகாரம் தபால்மூல வாக்கெடுப்பிற்கு அவசியமான வாக்குச்சீட்டுக்களை பெப்ரவரி 14 ஆம் திகதியளவில் விநியோகிப்பதாக அச்சகக்கூட்டுத்தாபனம் உத்தரவாதம் வழங்கியுள்ளது. அதன்படி தபால்மூல வாக்குச்சீட்டுக்களை பெப்ரவரி 15 ஆம் திகதி மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இருப்பினும் திடீரென பெப்ரவரி 13 ஆம் திகதி வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்கான முற்பணத்தைக்கோரி அச்சகக் கூட்டுத்தாபனம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்தது.

இது தபால்மூல வாக்கெடுப்பைத் திட்டமிட்ட தினத்தில் நடத்துவதில் சிக்கல்கள் காணப்படுவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பதற்கு வழிகோலியது.

அச்சகக்கூட்டுத்தாபனத்தின் தன்னிச்சையான தீர்மானங்களும், அர்த்தமற்ற தெளிவுபடுத்தல்களும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் செயன்முறையில் இடையூறு விளைவிக்கும் நோக்கில் அச்சகக்கூட்டுத்தாபனம் செயற்பட்டுள்ளதா என்ற நியாயமான சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

மேலும் பெப்ரவரி 17 ஆம் திகதி அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் பலமுறை தொலைபேசியின் ஊடாகவும், எழுத்துமூலமும் வலியுறுத்தப்பட்டதன் பின்னரும்கூட உரிய பாதுகாப்பை வழங்குவதற்குப் பொலிஸார் மறுத்துள்ளனர்.

எனவே அவசியமான பொலிஸ் பாதுகாப்பின்றி வாக்குச்சீட்டு அச்சிடும் பணியைத் தாம் தொடங்கியிருப்பதாக அச்சகக்கூட்டுத்தாபனம் அறிவித்தது. இதன் தொடர்ச்சியாக பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் உள்ளிட்ட அதிகாரிகளால் வெளியிடப்பட்ட ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் மூலம் பொலிஸார் அரசமைப்பின் ஊடாகத் தமக்கு அளிக்கப்பட்டுள்ள கடமையைத் திட்டமிட்டு மீறியிருக்கின்றமை தெளிவாகின்றது.

எனவே இந்த அனைத்துப் பொதுக்கட்டமைப்புக்களும், உயர் அரச அதிகாரிகளும் அவர்களுக்குரிய அரசமைப்பின் கீழான கடமைகளையும் மக்களின் அடிப்படை உரிமைகளையும் மீறியிருக்கின்றார்கள். அவர்களைப் பொறுப்புக்கூறச் செய்வதுடன் அவர்களுக்கு எதிராக உரியவாறான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசிடம் வலியுறுத்துகின்றோம்.

அதேபோன்று உள்ளூராட்சிமன்றத்தேர்தல் செயன்முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இடையூறு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு நாடாளுமன்றத்திடமும் கோருகின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு புதிய ஒட்சிசன் தொகுதி கையளிப்பு

## லயன்ஸ் கழத்தகால் ஒரு கோடியே 90 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டது

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைபெறும் நோயாளர்களுக்கு அவர்களின் ஒவ்வொரு படுக்கைகளுக்கும் ஒட்சிசன் சுவாசம் வழங்கும் பொருட்டு ஒட்சிசன் தொகுதி ஒரு கோடியே 90 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திறந்துவைக்கப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட உள்ளது.

லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் ஆர்.எல்.ராஜ்குமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் வைத்திய கலாநிதி அநோமா விஜயசிங்கவும், சிறப்பு விருந்தினராக முன்னாள் சர்வதேச பணிப்பாளர் சுனில் வட்டவலவும் கலந்துகொள்ள உள்ளனர்.

2021-2022 ஆம் ஆண்டுக்கான லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் ஆர்.எல்.ராஜ்குமாரின் பெருமுயற்சியால் லயன்ஸ் கழக பெண்கள் அணியினரின் தலைவியாகிய லயன் மரியன் ராஜ்குமாரின் ஒழுங்கமைப்பில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்று நோயாளர்களுக்கு ஒட்சிசன் தொகுதி ஒன்றை அமைத்து வழங்கவேண்டும் என்ற பெருநோக்கோடு அனைத்து லயன்ஸ் கழக உறுப்பினர்களிடமிருந்தும் சர்வதேச லயன்ஸ் கழகத்திடமிருந்தும் பெறப்பட்ட நிதியிலேயே இந்த ஒட்சிசன் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகுதி நாளை (வியாழக்கிழமை) உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டு வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் றெமான்ஸிடம் கையளிக்கப்பட உள்ளது.

# சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில்



நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் பூரணமாக நிறுத்தப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல், அனுமதியற்ற சுருக்கு வலை தொழிலில் ஈடுபடுதல் உட்பட நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது நீர் மற்றும் மின் கட்டண அதிகாிப்பால் ஏற்பட்ட உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால் ஐஸ் கட்டிகளின் விலையை அதிகரிக்கும் கோரிக்கையை உற்பத்தியாளர்கள் முன்வைத்துள்ளதுடன் அது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 23,24,25 ஆகிய திகதிகளில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கு மாகாணத்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

மேற்படி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கடற்றொழில் செயற்பாடுகள் மற் றும் நீர்வேளாண்மை உற்பத்திகள் தொடர்பாகவும் மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார். இந்நிலையில் கடற்றொழில் அமைச்சுக்கு இன்று வருகைதந்த முன்னாள் அமைச்சர் மில்றோய் பெனான்டோ, சிநேகபூர்வமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அறிவித்த திகதியில் தேர்தலை நடத்துக!

## சுதந்திரமான தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு வலியுறுத்து

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் செயன்முறை உறுதிசெய்யப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலுள்ள மக்களுக்கு ஆதரவாக நாம் இருப்பதுடன், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச்சட்டத்தின் பிரகாரம் மக்களின் விருப்பம் உரிய காலப்பகுதியில் நடத்தப்படும் தேர்தல்களின் ஊடாகப் பிரதிபலிப்பதை உறுதிசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என்று சுதந்திரமான தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் உள்ளூராட்சிமன்றத்தேர்தலை நடத்துவதற்கான செயன்முறையில் இடையூறு ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள்தொடர்பில்மிகுந்த விசனமடைகின்றோம்.

இந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தல் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி நடத்தப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் இந்தத் தேர்தல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற விவகாரங்கள் அமைச்சரால் சுமார் ஒரு வருடகாலமாகப் பிற்போடப்பட்டுவிட்டது.

எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட அந்தத் தேர்தலுக்கு இடையூறு விளைவிக்கப்படுவது தொடர்பில் கவலையடைகின்றோம்.

அரச அச்சகக்கூட்டுத்தாபனம் வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கான நிதி செலுத்தப்படும் வரையில் அவற்றைத் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கு மறுப்புத்தெரிவித்துள்ளது. அதன் விளைவாக இம்மாதம் 22 - 24 ஆம் திகதிவரை நடத்துவதற்குத்தீர்மானிக்கப்பட்டிருந்த தபால்மூல வாக்களிப்பு காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் மூவருக்கு எதிராகக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமை மற்றும் அவர்களைப் பதவி விலகுமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டமை என்பன தொடர்பாக வெளியான செய்திகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தியுள்ளோம்.

இவைபற்றி உரியவாறான விசாரணைகளை முன்னெடுக்குமாறும், குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவதை உறுதிசெய்யுமாறும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல் என்பது ஓர் அடிப்படை உரிமை எனும் அதேவேளை, இந்த உரிமையில் தலையீடுகளை மேற்கொள்வதற்கான எந்தவொரு முயற்சியும் இயலுமான அனைத்து வழிமுறைகளிலும் தோற்கடிக்கப்படவேண்டும்.

அதேவேளை மேலும் தாமதமின்றி ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படுவதையும், அந்தச் செயன்முறை வெளிப்படைத்தன்மையானதும் நியாயமானதுமான முறையில் இடம்பெறுவதையும் அரசாங்கம் உறுதி செய்யவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்களின் ஜனநாயக உரிமைகளை நாடாளுமன்று பாதுகாக்கவேண்டும்!

## விமல் வீரவன்ஸ வலியுறுத்து



நிதி இல்லை. ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு இடமளித்தால், எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல்ஆகியவையும் பிற்போடப்படும்.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க நாடாளுமன்றம் தலையிட வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடடவை வருமாறு –

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு சட்டத்தின் ஊடாக தடையேற்படுத்த அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து நிதி நெருக்கடி எனக் குறிப்பிட்டுக்கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் தற்போது தடையேற்படுத்தியுள்ளது.

நிதி இல்லை. ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாது என்று குறிப்பிட்டுக்கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட இடமளித்தால், எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலையும், ஜனாதிபதி தேர்தலையும் அரசாங்கம் பிற்போடும்.

அப்போதும் நிதி இல்லை என்ற தர்க்கமே முன்வைக்கப்படும்.

பொதுத்தேர்தல், ஜனாதிபதி தேர்தலை பிற்போட வேண்டுமாயின், அதற்கு மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். மக்கள் வாக் கெடுப்பை நடத்தவும் நிதி இல்லை என்று ஜனாதிபதி குறிப்பி டுவார்.

ஜனாதிபதியின் எண்ணப்பாட்டுக்கு அமைய தேர்தல் நடவடிக்கைகளை தீர்மானிக்க முடியாது.

அது ஜனநாயக கொள்கைக்கு எதிரானது.

நிதி இல்லை. ஆகவே, நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிட்டாலும் ஆச்சரியமடைய வேண்டியதில்லை. அவ்வாறான மனநிலையில் தான் அவர் உள்ளார். அரசாங்கத்தின் முறையற்ற வரிக் கொள்கை, மின்கட்டண அதிகரிப்பு ஆகியவற்றால் நாட்டு மக்கள் விரக்தியடைந்துள்ளனர்.

நாட்டு மக்களின் அரசியல் அபிலாஷைகள் தேர்தல் ஊடாகவேவெளிப்படுத்தப்பட வேண்டும். ஆகவே, மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்க நாடாளுமன்றம் தலையிட வேண்டும். – என்றார்.

# வாக்குரிமையைத் தடுப்பதற்கு சமூகப் பிரதிநிதிகள் கண்டனம்

## சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் 81 பேர் கூட்டாக அறிக்கை

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாக்களிப்பதற்கான மக்களின் உரிமை, இறையாண்மை மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றைப் புறக்கணிக்கும் வகையில் சில அதிகாரம் பொருந்திய தரப்பினரால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் 81பேர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி ஜனநாயகத்தைப் புறந்தள்ளுவது அரசியல் உறுதிப்பாடின்மை மேலும் தீவிரமடைவதற்கே வழிவகுக்கும். அது தற்போதைய பொரு ளாதார மீட்சி செயன்முறை யிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒஸ்டின் பெர்னாண்டோ, பவானி பொன்சேகா, பிரிட்டோ பெர்னாண்டோ, கலாநிதி தேவநேசன் நேசையா, கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, கலாநிதி வின்யா ஆரியரத்ன, அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், சட்டத்தரணி நுவன் போபகே, மிராக் ரஹீம், பேராசிரியர் ஜயதேவ உயன்கொட, கலாநிதி ராதிகா குமாரசுவாமி உள்ளடங்கலாக மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் 81 பேர் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், அதனைப் பிற்போடுவதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மீது தொடர்ச்சியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றமை தொடர்பாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் நாம் மிகுந்த விசனமடைகின்றோம்.

அதுமாத்திரமன்றி இந்த அழுத்தங்கள் குறிப்பாக நிறைவேற்றதிகாரத்தரப்பு உள்ளிட்ட அரசாங்கத் தரப்பிடமிருந்தே உருவாகின்றன என்பது தெளிவாகியுள்ளது.

பொருளாதார நெருக்கடியின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள சமூக –பொருளாதார சவால்களுக்கு மத்தியில் ஜனநாயக செயன்முறைகள், மக்களின் வாக்களிப்பதற்கான உரிமை மற்றும் இறையாண்மை ஆகியவற்றைப் புறந்தள்ளும் செயற்பாடுகளைத் தோற்கடிப்பதற்கு நாமனைவரும் ஒன்றிணையவேண்டும். ஜனநாயகத்தைப் புறந்தள்ளுவது, அரசியல் உறுதிப்பாடின்மை மேலும் தீவிரமடைவதற்கே வழி வகுக்கும். அது தற்போதைய பொருளாதார மீட்சி செயன் முறையிலும் பாரிய தாக் கத்தை ஏற்படுத்தும்.

திட்டமிட்ட காலப்பகுதியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு அரசமைப்பு ரீதியில் தேர்தல்கள் ஆணைக்குழு கொண்டிருக்கும் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம் என்று அந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கஞ்சா செடிகளை வளர்த்த இருவர் பனாமுரவில் கைது!

பனாமுர பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் கஞ்சா தோட்டமொன்று சுற்றிவளைக்கப்பட்டு சந்தேகநபர்கள் இருவர் நேற்று (செவ்வாக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. பனாமுர – தொடவத்த கந்த பிரதேசத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஓர் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட கஞ்சா தோட்டமொன்று முற்றுகையிடப்பட்ட போது 26 ஆயிரத்து 635 கஞ்சா செடிகளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 31 மற்றும் 50 வயதுடைய இங்கெட்டிய மற்றும் முல்லேடியாவ பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர்.

# குளவி கொட்டி வவுனியாவில் ஐவர் பாதிப்பு

வவுனியா கோவில்குளம் பாடசாலைக்கு அருகில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காற்றில் கலைந்த குளவி வீதியால் சென்றவர்கள் மீது கொட்டியதால் பாடசாலை சென்ற மாணவர் ஒருவர் உட்பட ஐவர் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

குளவி கொட்டுக்கு இலக்கானவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தகவல் அறிவிக்கப்பட்டு நோயாளர் அம்புலன்ஸ் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சையின் பின்னர் மாலையில் நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# 10 இற்கும் மேற்பட்ட பெண்களை அச்சுறுத்தி பாலியல் துஷ்பிரயோகம் செய்தவர் கைது!

ஆண்கள் இல்லாத வீடுகளுக்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து பெண்களை மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்தமை தொடர்பில் தேடப்பட்ட 'பொட்டே' என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளார்.

பத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு கொலை மிரட்டல் விடுத்து கொடூரமான முறையில் அவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பிலேயே 37 வயதுடைய சந்தேக நபர் கற்பிட்டி பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்கள் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையில் சந்தேக நபரைக் கைது செய்ய பயாகல பொலிஸார் பல தடவைகள் முயற்சித்தும் சந்தேக நபர் தப்பிச் சென்றமையால் பொலிஸாரின் முயற்சிகள் தோல்வியடைந்த நிலையிலேயே அவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சில வீடுகளின் கதவுகளை உடைத்து உள்ளே நுழைந்து பெண்களை கொடூரமான முறையில் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியமையும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# அனுமதியின்றி மது விற்ற இருவர் கைதடியில் கைது

தென்மராட்சி, பெப். 22

தென்மராட்சி – கைதடிப் பகுதியில் அனுமதியின்றி மதுபானம் விற்பனை செய்த இருவர் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் இன்று காலை கைது செய்யப் பட்டனர்.

கைதடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலும்–வர்த்தக நிலையம் ஒன்றிலும் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்யப்படுவதாக சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில்; சாவகச்சேரி மதுவரிப் பரிசோதகர் வே.ரஷிகரன் தலைமையிலான குழுவினர் சோதனையில் ஈடுபட்டு இரு இடங்களிலும் இருவரைக் கைது செய்தனர். அவர்களி டமிருந்து சாராயப் போத்தல்கள் மற்றும் பியர் ரின்கள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.



# கொடியேற்றம்!

தென்மராட்சி, பெப் 22

தென்மராட்சி –வரணி மாசேரி புராதன குருநாதர் கோவில் அலங்கார உற்சவத் திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி காலை 10.30மணிக்கு கொடியேற்றத்திருவிழாவுடன் தொடங்கவுள்ளது.

மார்ச் 3ஆம் திகதி வெள்ளிக் கிழமை வேட்டைத் திருவிழாவும்,

5ஆம்திகததி ஞாயிற்றுக் கிழமை காலை 10மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவிருப்பதாக ஆலயத்தின் பிரதம பூசகர் சிவத்திரு சி.கா.கமலநாதன் தெரிவித்தார்.

# புலமைப் பரிசிலில் வென்ற மாணவனை தேடிச் சென்று வாழ்த்திய அதிகாரிகள்







(காரைதீவு சகா)

சம்மாந்துறை வலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய 175 புள்ளிகளைப் பெற்ற மாணவனை தேடிச் சென்று வாழ்த்தியிருக்கிறார்கள் கல்வி அதிகாரிகள்.

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி கோட்ட சொறிக்கல்முனை ஹொலிகுறொஸ் மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

2022 புலமைப் பரிசில் பரீட்சையில் சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட அதிகஷ்ட பாடசாலையான சொறிக்கல்முனை ஹோலிக்குரொஸ் மகா வித்தியாலயத்தில் கற்கும் சுதாகரன் செரோன் 175 புள்ளிகளைப் பெற்று வலயத்தில் முதலிடம் பெற்றிருந்தார்.

சம்மாந்துறை வலய கல்வி பணிமனையின் நிருவாகத்திற்கான பிரதிக் கல்வி பணிப்பாளர் எம் வை.யாசிர் அரபாத், கோட்டக்கல்வி பணிப்பாளர் பி. பரமதயாளன், உதவி கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் நேரடியாக சென்று குறித்த சாதனை மாணவனுக்கு மாலை சூட்டி பாராட்டிய தோடு வாழ்த்துக்களையும் தெரிவித்து கொண்டார்கள்.

இச்சாதனை பாடசாலை வரலாற்றில் இரண்டாவது மைல் கல்லாகும். 2020 ஆம் ஆண்டில் இதே பாடசாலையைச் சேர்ந்த ஷான் ஜொகிர்தன் 191 புள்ளி களைப் பெற்று சாதனை நிலைநாட்டியிருந்தார் என்று அதிபர் அருட்சகோதரி ஆ. சிறியபுஷ்பம் தெரிவித்தார்.

அதேவேளை இப்பாடசாலையில் இருந்து எஸ்.ஆன் சுஹல்யா 160 புள்ளிகளையும், எஸ்.ஏஞ்சலிஸ்ரன்157 புள்ளிகளையும், சி. ஜெரொமி சாறுக்கா 144 புள்ளிகளையும், ஏ.மிதுர்சிக்கா 144 புள்ளிகளையும் பெற்று சாதனை படைத்ததோடு பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாணவர்களும் 70 புள்ளிக்கு மேல் பெற்று 100 வீதம் சித்தியடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இப்பாடசாலையில் சாதனைகளை படைத்த மாணவர்களை கற்பித்த ஆசிரியர் எஸ். லோகேஸ்வரன் மற்றும் உதவிகளைச் செய்த ஏனைய ஆசிரியர்களையும் அதிபரையும் கல்வி அதிகாரிகள் பாராட்டினர்..

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கல்முனை பொது நூலக பெயர் மாற்றம்

# தமிழர் பிரதிநிதிகள் எதிர்ப்பது கவலை


### முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் இப்படித் தெரிவிப்பு

(அகீல்)

இன, மத பேதமின்றி தமிழ் மக்களுக்கும் பெரும் சேவையாற்றிய முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூரின் பெயரை கல்முனை பொது நூலகத்திற்கு சூட்டுவதை சிலர் இன ரீதியாக சிந்தித்து, எதிர்ப்பதானது மிகவும் கவலையளிக்குரிய விடயமாகும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ஏ.எல்.அப்துல் மஜீட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

ஏ.ஆர்.மன்சூர் அமைச்சராக இருந்து கல்முனைத் தொகுதிக்கு மட்டுமல்லாமல் முழு நாட்டிற்கும் சேவையாற்றிய ஓர் அரசியல் தலைவர். கல்முனைத் தொகுதியில் அவரால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக வள, உட்கட்டமைப்பு அபிவிருத்திகளாயினும் பாட சாலைகளின் அபிவிருத்திகளாயினும் தொழில் வாய்ப் புகள் வழங்குவதிலும் இன மத பேதமின்றியே அவற்றை அவர் செயற்பட்டார்.





அத்துடன் 1977ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சராகவும் 1979ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டம் உருவாக்கப்பட்டது முதல் அம் மாவட்டத்திற்கான அமைச்சராகவும் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவினால் நியமனம் செய்யப்பட்டிருந்த ஏ.ஆர்.மன்சூர் இவ்விரு மாவாட்டங்களிலும் தமிழ் மக்களுக்கு அரும் பணியாற்றியிருக்கிறார் என்பது வரலாறாகும்.

இத்தகைய பின்னணியில்தான் அவர் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இரண்டும் ஒன்றித்து வாழ்கின்ற கல்முனை நகரில் அப்போதைய வெளிவிவகார அமைச்சரான ஏ.சி.எஸ்.ஹமீதின் அனுசரணையுடன் பொது நூலகம் ஒன்றை நிறுவி, இரு சமூகங்களினதும் கல்வி மற்றும் அறிவு விருத்திக்கு வித்திட்டிருந்தார்.

இவ்வாறான ஒருவரின் பெயரை அவரால் கொண்டு வரப்பட்ட நூலகத்திற்கு சூட்டுவதை கல்முனை மாநகர சபையின் சில தமிழ் உறுப்பினர்கள் எதிர்த்து, அவ்விவகாரத்தை சர்ச்சையாக்கி, இன முரண்பாட்டுக்கு தூபமிட முயற்சிப்பதானது மிகவும் கவலையளிக்கிறது.

ஏ.ஆர்.மன்சூர் ஒரு முஸ்லிம் அரசியல்வாதி என்றபோதிலும் அவர் கல்முனைத் தொகுதி வாழ் தமிழ் சமூகத்திற்கும் நேர்மையுடன் தலைமைத்துவம் வழங்கியிருந்தார் என்பதை பெருமையுடன் பறைசாற்றுகின்ற இவ்வுறுப்பினர்கள், அரசியல் நோக்கத்திற்காக நியாயமற்ற முறையில் அவரது பெயர் சூட்டலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

தமிழ், முஸ்லிம் ஒற்றுமையை விரும்பாத சக்திகள் எவையும் இதன் பின்னணியில் செயற்படுகின்றனவா என்றும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு, வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் தாயகத்தில் சுயாட்சி போன்ற விடயங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் பயணித்து வருகின்ற சூழ்நிலையில், முஸ்லிம் காங்கிரஸின் ஆட்சி நிர்வாகத்தின் கீழுள்ள கல்முனை மாநகர சபையில் தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலரே ஏ.ஆர்.மன்சூரின் பெயர் சூட்டல் விவகாரத்தை வரிந்து கட்டிக்கொண்டு சர்ச்சையாக மாற்றியிருப்பதென்பது இரு சமூகங்களினதும் சார்பான கட்சிகளின் புரிந்துணர்வு செயற்பாடுகளை மழுங்கடித்து விடும் என்பதை சம்மந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும்- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



## பீடி இலைகளை கடத்திய மூவர் நேற்றிரவு கைது!

கற்பிட்டி ஆனவாசல் பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இரவு பீடி இலைகளை கடத்த முற்பட்ட மூவர் கற்பிட்டி விஜய கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப் பத்திரமின்றி சட்ட விரோதமாக பீடி இலைகளை லொறியில் கொண்டு செல்வதாக கற்பிட்டி விஜய கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, ஆனவாசல் பகுதியில் லொறியை மறித்து சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது அந்த லொறியில் 48 உரைபாக்களில் 1508 கிலோ பீடி இலைகளும், 39 உரைபாக்களில் 744 கிலோ புகையிலைகளும், 8 உரைபாக்களில் 129 கிலோ புகையிலைத் தூளும் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த சோதனை நடவடிக்கையின் பின்னர் கலேவெல பகுதியைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த பீடி இலைகள், புகையிலைகள், புகையிலைத்தூள் என்பன சட்டவிரோதமாக இந்தியாவிலி ருந்து கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்டுள்ளன என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

மேலும், கைதுசெய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்கள், கைப்பற்றப்பட்ட பீடி இலைகள், புகையிலைகள், புகையிலைத்தூள், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறி என்பவற்றைக் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் சந்தேக நபர்களிடம் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கூறும் கற்பிட்டி பொலிஸார், சந்தேக நபர்களையும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பீடி இலைகள், லொறி உள்ளிட்டவற்றை கட்டுநாயக்க சுங்கத் திணைக்களத்தினரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக இந்தியாவிலிருந்து கற்பிட்டி பகுதிக்கு ஐஸ் போதைப் பொருள், கேரள கஞ்சா, உலர்ந்த மஞ்சள், கிருமிநாசினிகள், திரவ உரம், ஏலக்காய் மூடைகள், கடலட்டைகள், சுறா இறகுகள், பாதனிகள், இலத்திரனியல் உபகரணங்கள், கடற்குதிரைகள் முதலானவை கடத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



## மன்னார் பிரதேச சபை உறுப்பினர் அப்துல் கரீம் முஹம்மது காலமானார்

மன்னார் பிரதேச சபை உறுப்பினர் அப்துல் கரீம் முஹம்மது ராசீக் தனது 56 ஆவது வயதில் இன்று (புதன்கிழமை) காலமானார்.

திடீர் மாரடைப்பு காரணமாக இன்றையதினம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனத் தெரியவருகிறது.

## அரசுக்கு எதிராக இன்றும்.....









(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகங்கள், பெற்றோலியம், மின்சாரம், வங்கிகள் உள்ளிட்ட பல முக்கிய நிறுவனங்களின் ஊழியர்கள் ஏராளமானோர் அந்த இடத்தில் குவிந்துள்ளனர்.

இதனால் குறித்த பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை அறிவிக்கப்பட்டபடி மார்ச் 9ஆம் திகதி நடத்தவேண்டும் என்று வலியுறுத்தி திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தி கொட்டும் மழைக்கு மத்தியிலும் போராட்டம் நடத்திய நிலையில் இந்த வாரத்தில் இது இரண்டாவது போராட்டம்.




# நைஜீரியாவில் வந்த பணமதிப்பிழப்பால் பணமின்றி மக்கள் பெரும் திண்டாட்டம்

## அலைமோதும் கூட்டத்தால் ஆங்காங்கே வன்முறை வெடிப்பு

நைஜீரியாவில் பண மதிப்பிழப்பு நடவடிக்கையால், அந்த நாட்டு மக்கள் கையில் பணமில்லாமல் திண்டாடி வருகிறார்கள். பல வங்கிகளில், தங்கள் கணக்குகளில் இருக்கும் பணத்தை எடுக்க நீண்ட வரிசைகளும் வன்முறைகளும் நடந்தேறி வருவதாக செய்திகள் வருகின்றன.

நைஜீரியாவில் புழக்கத்தில் இருந்த பழைய நைரா (ரூபாய்) நோட்டுகளை எல்லாம் மாற்றுவதற்கு பெப்ரவரி 20ஆம் திகதி வரை காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், பல வங்கிகளில் கூட்டம் அலைமோதுவது தொடர்பான காணொலிகள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

சில வங்கிகளில் ஒரு நபருக்கு அதிகபட்சமாக 20 ஆயிரம் நைரா மட்டுமே வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதால் வன்முறையும் வெடித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நைஜீரிய மத்திய வங்கியானது புழக்கத்தில் இருந்த 200, 500 மற்றும் 1000 நைரா நோட்டுகளை அகற்றுவதாக அறிவித்தது. அந்த நோட்டுகளை வங்கியில் கொடுத்து மாற்றிக் கொள்ள கடைசி நாளாக 2023ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதியை அறிவித்திருந்தது. பிறகு அது பெப்ரவரி 20ஆக நீடிக்கப்பட்டது. எனினும், போதுமான அளவில் புதிய நைரா நோட்டுகளை வங்கிகளால் புழக்கத்துக்குக் கொண்டு வர முடியவில்லை. இதனால் மக்களிடையே பணப்புழக்கம் இல்லாமல் வீதிக்கு இறங்கி போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மக்களிடையே வன்முறை வெடித்தாலும் இந்த நடவடிக்கையில் பின்வாங்கப் போவதில்லை என்று அந்த நாட்டு அதிபர் அறிவித்துவிட்டார்.

இந்த நிலையில், வங்கிகளில் மக்கள் போராட்டம் நடத்துவது உள்ளிட்ட விடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி வருகிறது. வங்கிகளைத் தாக்குவது, சாலைகளில் மறியலில் ஈடுபடுவது உள்ளிட்ட போராட்டங்களும் வலுத்து வருகின்றன.

பலருக்கும் இந்த மாத துவக்கத்தில் வந்த ஊதியத்தைக்கூட வங்கியிலிருந்து எடுக்க முடியாமல் அல்லாடுவதாகவும், மருத்துவச் செலவுக்குக்கூட கையில் காசில்லாமல் அவதிப்படுவதாகவும் மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

நாங்கள் கடன் கேட்கவில்லை. எங்கள் பணத்தைக் கேட்கிறோம் என்று வங்கிகளில் வாக்குவாதத்தில் ஈடுபடும் மக்களை என்ன செய்வதென்று தெரியாமல் வங்கி ஊழியர்களும் திணறி வருகின்றனர்.

# அணு ஆயுத உற்பத்திக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தை திடீரென நிறுத்திய ரஷ்யா

அமெரிக்காவும் ரஷ்யாவும் அணு ஆயுத உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் செய்து கொண்ட ஒப்பந்தததை செயற்படுத்துவதை உடனடியாக நிறுத்தி வைப்பதாக ரஷ்யா அறிவித்தது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் செவ்வாய்க்கிழமை இதனை அறிவித்தார்.

உலகின் 90 சதவீத அணு ஆயுதங்களை இந்த இரு நாடுகளும் தான் கைவசம் வைத்திருக்கின்றன. பனிப்போர்க் காலத்தில் அதிகரித்து வந்த அணு ஆயுதப் போட்டியைக் கட்டுப்படுத்தும் விதத்தில் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. ஆனால் அந்த ஒப்பந்தத்த தையே நிறுத்தி வைப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இதன் மூலம் ரஷ்யா மீண்டும் அணு ஆயுத உற்பத்தியை தொடங்கலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

ரஷ்ய நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் ஆண்டுதோறும் அந்த நாட்டு அதிபா உரையாற்று வது வழக்கம்.

உக்ரைன் மீது ரஷ்யா போா தொடுத்து ஓராண்டு நெருங்கியுள்ள நிலையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த ஆண்டுக்கான அக்கூட்டத்தில் அதிபா விளாடிமீா புதின் உரையாற்றினார்.



சுமாா 1 மணி 45 நிமிங்களுக்கு நீண்ட அந்த உரையில் பெரும்பாலும் உக்ரைன் விவகாரம் குறித்து புதின் பேசினார்.

அவர் தெரிவித்ததாவது:

உக்ரைன் போா விவகாரத்தில் நேட்டோ அமைப்பும் அமெரிக்காவும் ரஷ்யா வுக்கு ஒத்துழைப்பு அளிக்க தொடாந்து மறுத்து வருகின் றன.

இந்தக் காரணத்தால், அணு ஆயுதக் கையிருப்பை கட்டுக்குள் வைத்திருப்பதற்காக அமெரிக்காவுடன் மேற்கொண்டுள்ள 'நியூ ஸ்டார்ட்' ஒப்பந்த அமலாக்கத்தில் பங்கேற்பதை நிறுத்திவைப்பதாக அறிவிக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

இதற்குப் பிறகு அமெரிக்கா புதிய அணு ஆயுத சோதனைகளில் இறங்கினால், ரஷ்யாவும் அதுபோன்ற சோதனைகளை மேற்கொள்ளும்.

உக்ரைன் போரில் ரஷ் யாவை வீழ்த்துவது தான் தங்களது இலக்கு என்று அமெரிக் காவும் நேட்டோ அமைப்பும் வெளிப்படையாகவே அறிவித்து வருகின்றன.

ரஷ்யாவை விட ராணுவ ரீதியில் தங்களது கை மேலோங் கியிருக்க வேண்டும் என்ற வியூகத்துடன் நம்மைத் தோற் கடிக்க நினைக்கும் மேற்கத்திய நாடுகள், நமது அணு ஆயுத பலத்தையும் பறிக்கத் திட்ட மிட்டுள்ளன.

அணு ஆயுதக் கட்டுப் பாட்டு ஒப்பந்தத்தின் கீழ், ரஷ்ய அணுசக்தி மையங்களில் தாங்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்துகிறது.

அதேநேரம், அந்த நாட்டின் கூட்டாளியான நேட்டோ அமைப்பு, அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் விமானங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் ரஷ்ய விமான தளங்களை ஆளில்லா விமானங்கள் மூலம் உக்ரைன் தாக்குதவதற்கு உதவி அளிக்கிறது. அத்தகைய தாக்குதல்களுக்கு உக்ரைன் பயன்படுத்தும் ஆளில்லா விமானங்கள் நேட்டோவால் ஆயுதம் பொருத்தப்பட்டு நவீனமாக்கப்பட்டவை.

இந்த நிலையில், அத்தகைய அணு ஆயுத தளங்களில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா கூறுவது முற்றிலும் பொருத்தமற்றதாகும்.

இப்போதைய நிலையில் 'நியூ ஸ்டார்ட்' ஒப்பந்த அமலாக்கத்திலிருந்து தற்காலிகமாகத்தான் விலகுகிறோம். அந்த ஒப்பந்தத்தை முற்றிலுமாகக் கைவிடவில்லை என்றாார் அவர். அவரது அறிவிப்பு பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் அமெரிக்க அதிபர் உக்ரைனுக்குத் திடீர் பயணம் மேற்கொண்டிருந்தார். அதற்குப் பதிலடியா கவே ரஷ்யா அணு ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அறி வித்துள்ளது.

## சவூதித் தலைநகரில் மிகப் பெரிய கட்டடம்

### உருவாக்கப்படும் என அரசு அறிவிப்பு

சவுதி அரேபியா தலைநகர் ரியாத்தின் நடுப் பகுதியில் 'தி முகாப்' என்ற பெயரில் ஒரு மிகப் பெரிய கட்டடம் உருவாக்கப்படும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இந்த திட்டம் தொடர்பாக ஒரு காணொலியை அரசு வெளியிட்டுள்ளது. இது சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ளது. இந்த கட்டடம் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள எம்பயர் ஸ்டேட் கட்டடத்தைப் போல 20 மடங்கு பெரிதாக இருக்கும். 19 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில், 400 மீற்றர் உயரத்தில் இந்த கட்டிடம் அமையும். இதில் அருங் காட்சியகம், தொழில்நுட்ப மற்றும் வடிவமைப்பு பல்கலைக்கழகம், பல் நோக்கு திரையரங்கம் மற்றும் 80க்கும் மேற்பட்ட கலாச்சார மையங்கள் அமைய உள்ளன.

இதுதவிர 1.04 லட்சம் குடியிருப்புகள், 9,000 சொகுசு விடுதி அறைகள், 9.8 லட்சம் சதுர மீற்றர் பரப்பில் சில்லறை வணிக கடைகள், 14 லட்சம் சதுர மீற்றர் அலுவலக இடங்கள், 6.2 லட்சம் சதுர மீற்றர் ஓய்வு மையங்கள், 18 லட்சம் சதுர மீற்றர் சமுதாய மையங்களும் இதில் அமைய உள்ளன.

இதன் கட்டுமானப் பணி 2030இல் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் 3.34 லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும்.

சவுதி அரேபிய அரசு 100 மைல் நீள ஸ்கை ஸ்கிராப்பர் திட்டத்தை கடந்த ஆண்டு அறிவித்தது.

இதன் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேலும் ஒரு பெரும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க அதிபராவதற்கு இந்திய வம்சாவளியின் மற்றொரு நபரும் களத்தில்



அமெரிக்க அதிபா தோதலில் போட்டியிட இந்திய வம்சாவளியைச் சோந்த தொழிலதிபா விவேக் ராமசாமி (வயது 37) விருப்ப மனு அளித்துள்ளாா். அமெரிக்கத் தோ்தலில் போட்டியிடவுள்ள இரண்டாவது இந்திய வம்சாவளியினா் இவா்.

அமெரிக்காவில் அதிபா தோதல் அடுத்த ஆண்டு நவம்பா 5ஆம் திகதி நடைபெற உள்ளது.

இந்தத் தோதலில் போட்டியிட முன்னாள் அதிபா ட்ரம்ப் மற்றும் இந்திய வம்சாவளி பெண் நிக்கி ஹேலி ஆகியோா் ஏற்கெனவே குடியரசு கட்சியில் விருப்ப மனு அளித்துள்ளனா். இந்த நிலையில் அதே கட்சியைச் சேர்ந்தவரும், இந்திய வம்சாவளி தொழிலதிபருமான விவேக் ராமசாமியும் விருப்ப மனு அளித்துள்ளாா்.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் இருந்து அமெரிக்காவுக்குப் புலம்பெயாந்த இந்திய தம்பதிக்கு மகனாகப் பிறந்தவா விவேக் ராமசாமி. அவரின் தந்தை மின் பொறியாளராகவும், தாய் முதியோா மனநல மருத்துவராகவும் இருந்தனா. அமெரிக்காவில் உள்ள சின்சினாட்டியில் பிறந்த விவேக் ராமசாமி, புகழ்பெற்ற ஹார்வாட், யேல் பல்கலைக்கழகங்களில் படித்தவா. அவரின் சொத்து மதிப்பு 500 மில்லியன் டொலர்களுக்கும் அதிகம் என்று கூறப்படுகிறது.

அதிபர் தோதலில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு முன்னா, குடியரசு கட்சியின் வேட்பாளருக்கான தெரிவுப் போட்டியில் அவர் வெற்றி பெறவேண்டும். மும்முனைப் போட்டியிட்டு கட்சியினரின் ஆதரவைப் பெறுபவரே அதிபர் தேர்தலில் போட்டி யிடுவதற்கான தகுதியைப் பெறுவார்.

# வாரத்தில் 4 நாள்கள் வேலை பிரிட்டனில் திட்டம் வெற்றி

பிரிட்டனில் நடத்தப்பட்ட 'வாரத்தில் 4 நாள்கள் வேலை' சோதனைத் திட்டம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு ஜூன் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை வாரத்தில் 4 நாள்கள் வேலை செய்யும் சோதனை திட்டத்தை பல்வேறு துறைகளை சார்ந்த 61 நிறுவனங்கள் செயல்படுத்தின.

இதுகுறித்து ஒக்ஸ்போர்டு மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து சோதனையில் ஈடுபட்ட பாஸ்டன் கல்லூரியைச் சேர்ந்த முன்னணி ஆராய்ச்சியாளரும், பேராசிரியருமான ஜூலியட் ேோர் இது குறித்துத் தெரிவித்ததாவது:

இந்தச் சோதனையில் சில சுவாரசியமான வேறுபாடுகள் காணப்பட்டன. பணியாளர்கள் தங்களின் வேலை நேரத்தை சராசரியாக அதிகரித்ததை நாங்கள் கண்டோம். அதேபோல், கட்டுமானம் மற்றும் உற்பத்தி துறைகளில் இருப்பவர்களுக்கு ஏற்படும் தீக்காயம் மற்றும் தூக்க பிரச்சினைகள் மிகப்பெரிய அளவில் குறைந்துள்ளன – என்றார்.

4 நாள்கள் வேலை திட்டத்தின் சோதனையின் முடிவில், பெரும்பாலான நிறுவனங்கள் இந்த முறையை தொடரப் போவதாக அறிவித்துள்ளனர்.

கிட்டத்திட்ட 91 சதவிகிதம் நிறுவனங்கள் இந்த திட்டத்தை தொடரப் போவதாகவும், 4 சதவிகிதம் நிறுவனங்கள் இதுகுறித்து ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளன. 4 சதவிகித நிறுவனங்கள் மட்டுமே இந்த திட்டத்தை தொடரப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளன.

இந்தச் சோதனைக்கு சராசரியாக 10க்கு 8.5 மதிப்புகளை நிறுவனங்கள் வழங்கியுள்ளன. வணிக உற்பத்தித் திறன் மற்றும் வணிக செயல்திறன் பிரிவுகளுக்கு 7.5 சதவிகித மதிப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், கடந்த ஆண்டை இதே காலகட்டங்களுடன் ஒப்பிடுகையில், நிறுவனங்களின் வருவாய் சுமார் 35 சதவிகிதம் அதிகரித்ததுடன் புதிய வேலை வாய்ப்புகளும் உருவாகியுள்ளதாக ஆய்வின் முடிவில் தெரிய வந்துள்ளது.

# சீன அதிபர் விரைவில் ரஷ்யாவுக்குப் பயணம்




சீன அதிபர் ஜி ஜின்பிங் ரஷ்யாவுக்கு விரைவில் பயணம் செய்ய இருக்கிறார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஓராண்டு காலமாக நடந்து வரும் உக்ரைன் – ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவர இந்த சந்திப்பு உதவும் என்றும் அரசியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் ரஷ்யப் பயணம் ஏப்ரல் இறுதி அல்லது மே மாதத்தின் தொடக்கத்தில் அமையும் என்று ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சீன அரசின் தலைமை பிரதிநிதி வாங் யீ தற்போது ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இருக்கிறார், இன்று புதன்கிழமை ரஷ்ய அயலுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் வாங் யீயின் ஐரோப்பிய பயணத்தில் ரஷ்யா – உக்ரைன் போருக்கு பேச்சு மூலம் தீர்வு காணுமாறும் அவர் வலியுறுத்தினார். புதின் – ஜி ஜின்பிங்கின் சந்திப்பு கடந்த ஆண்டு தொடக்கத்தில் நடந்தது. இந்த நிலையில் ஒரு வருடத்திற்கு பிறகு மீண்டும் சந்திக்க உள்ளனர்.

முன்னதாக, ரஷ்யா – உக்ரைன் போர் தொடங்கி ஓராண்டு நிறைவடைந்தைத் தொடர்ந்து ரஷ்ய அதிபர் புதின் பேசும்போது, நமது நாடு மற்றும் மக்களின் எதிர்காலத்திற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணத்தில் நாம் (ரஷ்யா) இருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். ரஷ்யாவின் இருத்தலுக்காகவே உக்ரைனுடன் போர் நடந்து கொண்டிருக்கிறது என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## இந்திய டென்னிஸ் நட்சத்திரம்

# சானியா மிர்சா விடைபெற்றார்




மகளிர் டென்னிஸ் விளையாட்டில் இந்தியாவின் நட்சத்திரமாக விளங்கிய சானியா மிர்சா, தனது கடைசி சர்வதேச ஆட்டத்தில் நேற்று விளையாடியிருந்தார்.

துபாய் ஓபின் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவின் முதல் சுற்றில் களமிறங்கிய அமெரிக்க வீராங்கனை மடிசன் கீய்ஸ், சானியா மிர்சா ஜோடி, ரஷ்ய ஜோடியான வெரோனிகா, சாம்சநோவா ஜோடியை எதிர்கொண்டது. சானியா மிர்சாவின் கடைசி சர்வதேசத் தொடர் என்பதால் பெரும் எதிர்பார்ப்பு இருந்த இந்தப் போட்டியில் 4-6, 0-6 என்ற செட் கணக்கில் சானியா மிர்சா ஜோடி அதிர்ச்சித் தோல்வியைத் தழுவி தொடரிலிருந்து வெளியேறியது. தனது கடைசி டென்னிஸ் போட்டியில் விளையாடி ரசிகர்களிடம் இருந்து பிரியாவிடை பெற்றார் சானியா மிர்சா.

20 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவின் மகளிர் டென்னிசின் அடையாளமாக சானியா மிர்சா விளங்கினார். மகளிர் ஒற்றைப் பிரிவு தரவரிசையில் 27 ஆவது இடத்தைப் பிடித்து சாதனை முத்திரை பதித்த சானியா மிர்சா கிரான்ட்ஸ்லாம் தொடரில் ஒற்றையர் பிரிவில் இரண்டாவது சுற்றைக் கடந்து சென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றிருந்தார். எனினும் அவ்வப்போது ஏற்பட்ட காயம் காரணமாக சானியா மிர்சாவால் ஒற்றையர் பிரிவில் பெரிதளவில் சாதிக்க முடியவில்லை.

எனினும் தன்னுடைய வைராக்கியத்தை இழக்காத சானியா மிர்சா இரட்டையர் பிரிவுக்கு மாறி ஜொலிக்கத் தொடங்கினார். ஆறு மகளிர் இரட்டையர் பிரிவு கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டங்களை வென்று சாதனை படைத்த சானியா மிர்சா, தொடர்ந்து மகளிர் இரட்டையர் பிரிவில் 91 வாரங்களுக்கு தரவரிசையில் முதலிடத்தில் இருந்துள்ளார்.

துபாயில் தனது போட்டி தொடங்குவதற்கு முன்பு செய்தியாளர்களிடம் பேசிய சானியா, பெண்பிள்ளைகளுக்கு பல சிந்தனைக் கருத்துக்களை வழங்கினார். நீங்கள் பெண் குழந்தைகளாக பல்வேறு அழுத்தத்தை சமூகம் மூலம் எதிர்கொள்வீர்கள். என் விஷயத்தில் நான் கொஞ்சம் அதிர்ஷ்டசாலி. என்னுடைய பெற்றோர்கள் எனக்கு உறுதுணையாக நின்றார்கள். ஆனால், இந்த சமூகத்தை நான் தனியாகத்தான் எதிர்கொண்டேன். நாம் சரியான திசையில்தான் சென்று கொண்டிருக்கிறோம் என்று இந்த சமூகத்திற்கு நாம் புரிய வைக்க வேண்டும்.

இளம் பெண்களுக்கு நான் சொல்லிக் கொள்வது ஒன்றே ஒன்றுதான். நீங்கள் நினைப்பதை செய்யக்கூடாது என்று யாரும் உங்களைத் தடுக்க நீங்கள் அனுமதிக்காதீர்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக்கூடாது? என்று மற்றவர்கள் உங்களுக்காக முடிவெடுக்கக்கூடாது. இந்த சமூகம் பெண் குழந்தைகளை அப்படித்தான் செய்யும். நீங்கள்தான் உங்களை நம்பிப் போராடவேண்டும். வாழ்க்கையில் நிச்சயம் நெருக்கடிகளும் அழுத்தங்களும் இருக்கத்தான் செய்யும். அதனை நீங்கள் எப்படி எதிர்கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்துத்தான் நீங்கள் வெற்றி அடைவீர்களா என்பது தெரியும். நீங்கள் சம்பியன் ஆவதும் சராசரி ஆளாக ஆவதும் நீங்கள் எப்படி விளையாடுகிறீர்கள் என்பதைப் பொறுத்து அல்ல. உங்களுக்கு இருக்கும் பிரச்சனைகளை நீங்கள் எப்படி எதிர்கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே அது அமையும்.

இந்திய டென்னிசில் மிகப்பெரிய பிரச்சனைகள் இருக்கின்றன. பல நாடுகள் டென்னிஸுக்கு லட்சக் கணக்கில் செலவு செய்கிறார்கள். ஆனால், இந்தியாவில் நாம் ஏதேனும் தொடரை வென்றால் மட்டுமே நம்மிடம் ரசிகர்கள் மட்டும் வந்து புகைப்படம் எடுத்துச் செல்வார்கள். இப்படி இருந்தால் எப்படி நம் நமது நாட்டில் சம்பியன்ஸ் உருவாவார்கள்?

டென்னிஸில் சாதித்த இந்திய வீரர்களிடம் நீங்கள் கேட்டுப்பாருங்கள். இங்கு இருக்கும் கட்டமைப்பினால் நாங்கள் வெற்றி பெறவில்லை. இந்த கட்டமைப்புகளையும் மீறித்தான் நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம். உண்மையைச் சொல்லப்போனால் டென்னிசுக்காக இங்கு எந்த முறைமையும் இல்லை, என்றும் கூறியுள்ள சானியா மிர்சா தற்போது இளம் வீராங்கனைகளுக்கு உதவுவதற்காக பயிற்சி அகாடமியை தொடங்கி நடத்த உள்ளதாகவும் அறிவித்திருக்கிறார்.

சானியா மிர்சா தற்போது மகளிர் பிரீமியர் கிரிக்கெட் தொடரில் பெங்களூர் அணிக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பி.எஸ்.எல். தொடர் களத்தில் இலங்கை வீரர் தசுன் சானக்க

பாகிஸ்தான் சுப்பர் லீக் (பி.எஸ்.எல்) ரி-20 லீக் தொடரில் பெசாவர் ல்மி அணியில் இடம்பெற்றிருக்கும் இலங்கை ஒருநாள் மற்றும் ரி-20 அணிகளின் தலைவரான தசுன் சானக்க தனது முதல் ஆட்டத்தில் விளையாடியுள்ளார்.

இந்தத் தொடரின் இந்த வருடத்துக்கான போட்டி கடந்த வாரம் தொடங்கியது. தொடரின் ஒன்பதாவது லீக் போட்டி கடந்த 20ஆம் திகதி பெசாவர் ஸல்மி மற்றும் குயேட்டா கிளாடியேட்டர்ஸ் அணிகளுக்கு இடையில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் பாபர் அசாம் தலைமையிலான பெசாவர் ஸல்மி அணிக்காக தனது பி.எஸ்.எல். அறிமுகத்தை சானக்க மேற்கொண்டிருந்தார். பந்துவீச்சில் 2 ஓவர்களை வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்த அவர், துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் இருந்து 16 ஓட்டங்களை எடுத்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

தசுன் சானக்கவைத் தவிர நுவான் துஷார, பானுக்க ராஜபக்ச ஆகிய இலங்கை வீரர்களும் 2023ஆம் ஆண்டுக்கான பருவத்தில் பி.எஸ்.எல். போட்டிகளில் அறிமுகம் பெற்றிருக்கின்றனர்.

# இளம் வீரர்களுக்கான புதிய கிரிக்கெட் தொடர்

## தொடங்குகிறது இலங்கை




இளம் கிரிக்கெட் வீரர்களின் திறமைகளுக்கு வாய்ப்பு வழங்கும் நோக்கில் புதிய கிரிக்கெட் தொடர் ஒன்றை இலங்கை கிரிக்கெட் சபை தொடங்குகிறது.

23 வயதுக்குட்பட்டோருக்கான இலங்கை கிரிக்கெட் சபை அழைப்புத் தொடர் ழ்ரீஸிளீஷீ 23 ணூ ஐ ஸ ஷ் மி ழி மி ஷ் லி ஐ ழி யி வீலிற்ஷஜழிதுளஜமி) எனப்பெயரிடப்பட்டுள்ள இந்த கிரிக்கெட் தொடர், இந்த மாதம் 25ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்தத் தொடரில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்கவுள்ளன.

இந்தப் புதிய தொடரானது, இலங்கைக் கிரிக்கெட் சபை நடாத்துகின்ற 23 வயதுக்குக் குறைந்த வீரர்களுக்கான முதன்மை லீக் தொடரில் பங்கெடுக்காத புதிய வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கி அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

அணிக்கு 50 ஓவர்கள் கொண்ட போட்டிகளாக நடைபெறவுள்ள இந்த கிரிக்கெட் தொடரில் பெரும் கிரிக்கெட் தொடரில் பங்கெடுத்த அணிகளும், 2022ஆம் ஆண்டுக்கான பெரும் லீக் தொடரில் தமது தரநிலையை இழந்த (Relegate) கழகங்களும் பங்கெடுக்கவுள்ளன. அத்துடன் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக கிரிக்கெட் போட்டிகளில் ஆடிவரும் திம்புல கிரிக்கெட் கழகத்திற்கும் இந்த புதிய கிரிக்கெட் தொடரில் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் போட்டித் தொடர் இரு குழுக்கள் கொண்டதாக கட்டமைக்கப்பட்டுள்ளதோடு, ஒவ்வொரு குழுக்களில் இருந்தும் அரையிறுதிப் போட்டிகளுக்காக இரு அணிகள் தெரிவுசெய்யப்படவுமிருக்கின்றன. தொடரின் இறுதிப் போட்டியை மார்ச் மாதம் 26 ஆம் திகதி நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




# தென்னாபிரிக்க தொடருக்கான மே.தீவுகள் அணிகள் அறிவிப்பு

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நடைபெறவுள்ள ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களுக்கான மேற்கிந்திய தீவுகளின் அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஒருநாள் அணியின் தலைவராக சாய் ஹோப்பும் ரி-20 அணியின் தலைவராக ரோமன் பவெலும் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்களின் கீழ் இரு அணிகளுக்குமான வீரர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அறிவித்துள்ள குழாத்தில் குறிப்பிடத்தக்க மாற்றமாக, செனொன் கப்ரியல் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளார். இவர் இறுதியாக கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒருநாள் உலகக்கிண்ணத் தொடரில் விளையாடியிருந்தார். இவருடன் ரொஸ்டன் சேசும் ஒருநாள் போட்டிகளுக்கான குழாத்துக்கு மீண்டும் திரும்பியுள்ளார்.

வேகப் பந்துவீச்சாளர்களைப் பொருத்தவரை அண்டர்சன் பிலிப்ஸ் உபாதையிலிருந்து குணமடைந்தாலும் போட்டிக்கான பூரண தகுதியைப் பெறவில்லை என மேற்கிந்தியத் தீவுகள் அறிவித்துள்ளது. ஒபெட் மக்கோய் ரி-20 குழாத்தில் இணைக்கப்பட்டிருந்தாலும் வைத்திய ஆலோசனையின் அடிப்படையிலேயே போட்டிகளில் விளையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி ரி-20 உலகக்கிண்ணத்தின் முதல் சுற்றுடனேயே வெளியேறியிருந்தாலும், அந்த அணியிலிருந்து ஒரேயொரு மாற்றம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் எவின் லூயிஸிற்குப் பதிலாக சகலதுறை வீரர் ரொமாரியோ ஷெப்பர்ட் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை முன்னாள் அணித் தலைவர் நிக்கோலஸ் பூரன், ஜேசன் ஹோல்டர், கையல் மேயர்ஸ், அல்சாரி ஜோசப் மற்றும் ஜோன்சன் சார்ல்ஸ் போன்ற அனுபவ வீரர்கள் தென்னாபிரிக்க தொடருக்கான குழாத்தில் தங்களுடைய இடங்களைத் தக்கவைத்துள்ளனர்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான மேற்கிந்தியத் தீவுகளின் ஒருநாள் தொடர் மார்ச் 16 முதல் 21 வரையும், ரி-20 தொடர் மார்ச் 25 முதல் 28 ஆம் திகதிவரையும் நடைபெறவுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.02.2023 இல் வெளியிடப்பெற்றது.